Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

சொலிலக்ஸ்
முக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்கவும்,
செயற்கை மாபிள் கண்களுக்கும்
மற்றும் பல் கட்டுதல், மிதப்புப் பற்களுக்கு
கிளிப்ஸ் செய்து கொடுத்தல்.
லக்ஷறி பல் கட்டுமிடம்
232 /A, கண்டி வீதி, சாவகச்சேரி.
(சி-281)

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 01 (06.12.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 66



பேச்சுக்கள் முடிவில் செய்தியாளர் மாநாட்டில் பாலா, ஹெல்கிசன், பீரிஸ்

### விண்ணாணம் விநாசியர்



எமது முஸ்லிம் சகோதரர்களுக்கு ஈதுல் ஃபிதர் வாழ்த்துக்கள்.

# சமஷ்டிக் கட்டமைப்பிலிருந்து தீர்வுக்கான பேச்சு நகரும்!

## மூன்றாம் சுற்றுப் பேச்சு முடிவில் அரசாங்கம் - புலிகள் இணக்கம்

(ஒஸ்லோ)

**தமிழ் மக்களுக்கான - உள்ளக சுயநிர்ணய உரிமையை நோக்காகக் கொண்ட தீர்வுக்கான ஆராய்வுகளை சமஷ்டிக் கட்டமைப்பிலிருந்து ஆரம்பிப்பதற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளனர்.**

ஒஸ்லோவில் நடைபெற்று வந்த மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் நேற்றுடன் முடிவடைந்தன.

இந்தப் பேச்சுக்கள் -

யுத்தநிறுத்தத்தை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், மனிதாபிமான, புனர்வாழ்வுச் செயற்பாடுகள்,அரசியல் விவகாரம் என்ற மூன்று வடிவங்களினூடாக நடைபெற்றன.

இந்தப் பேச்சுக்களில் முக்கியமான திருப்பமாக - அரசியல் தீர்வு பற்றிய ஆலோசனைகள் இடம்பெற்றன.

இதன் தொடராக - கனடா நாட்டு சமஷ்டி அரசியலமைப்பு பற்றி ஆராயப்பட்டதுடன் - விடுதலைப் புலிகளின் தலைவரால் பிரேரிக்கப்பட்டிருந்த தமிழ் மக்களுக்கான உள்ளக சுயநிர்ணய உரிமையைக்கொண்ட தீர்வினை நோக்கியதாக, ஒன்றுபட்ட இலங்கைக்குள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்றில் முக்கிய திருப்பம் பீரிஸ், ஹெல்கிசன் மகிழ்ச்சி

(ஒஸ்லோ)

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் நேற்று முதல் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. இது ஓர் வரலாற்றுத் திருப்பம் என நோர்வேயின் பிரதிநிதி ஹெல்கிசன் கூறியது மிகச் சரியே என நேற்றைய பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களிடையே தெரிவித்தார் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

பிரிவினையின்றி ஒரே நாட்டிற்குள அதிகாரத்தைப் பகிர இரு தரப்பும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## எமது நியாயமான தீர்வுக்கு சர்வதேசம் ஆதரவாகவுள்ளது

### பத்திரிகையாளரிடையே பாலா



இப்போதுள்ள அரசியலமைப்பு தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்படாத அரசியலமைப்பு. 1972, 1978ம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்புச் சட்டங்கள் தமிழ் மக்களின் அங்கீகாரம் பெறவில்லை. இது வரலாற்று உண்மை.

இவ்வாறு- நேற்று ஒஸ்லோவில் முடிவடைந்த மூன்றாம் சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்றைய அரசியல் கட்டமைப்பில் தமிழ்மக்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். முழுமையான பங்களிப்பு

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. அலுவலகங்களுக்கு முன் பரவலாக நேற்று மக்கள் போராட்டம்



மல்லாகத்தில் நேற்று நடந்த போராட்டம் *(மேலும் படங்கள் 9 ஆம் பக்கத்தில்)*

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலுமுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகங்களுக்கு முன்பாக பொதுமக்கள் ஒன்றுதிரண்டு மாபெரும் மறியல் போராட்டத்திலும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

நெடுந்தீவு மக்களின் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் குடாநாட்டிலிருந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரை வெளியேறக் கோரியும் இப்போராட்டங்கள் நடைபெற்றன.

நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை - மானிப்பாய்,சுன்னாகம், மல்லாகம், ஊர்காவற்துறை ஆகிய பகுதிகளில் மேற்படி மக்கள் போராடடங்கள் நடைபெற்றன. இப்போராட்டங்களில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் - ஆண்கள், பெண்கள், சிறுவர், முதியோர் என்ற வேறுபாடின்றி ஒன்று திரண்டு ஈடுபட்டனர். போராட்டம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பிரதிநிதிகளுக்கு சுவிஸ் அரசு அழைப்பு

சுவிற்சர்லாந்து நாட்டின் அரசியல யாப்பு விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவினர் சுவிற்சர்லாந்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

நாளை மறுதினம் ஒஸ்லோவில் இருந்து சுவிஸ் நாட்டுக்கு இக்குழுவினர் செல்லவுள்ளனர். சுவிஸ் அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இவர்கள் அங்கு செல்லவுள்ளனர்.


அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன், கருணா ஆகியோர் அடங்கிய குழுவினரே சுவிஸ் நாட்டுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

சில தினங்கள் அங்கு தங்கியிருக்கும் இவர்கள் அந்த நாட்டின் அரசியல் யாப்பு விடயங்கள் குறித்து அங்குள்ள உயர் அதிகாரிகளுடன் விரிவான பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

SERENDIB
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019
(சி-148)

# ஐ.நா.ஆயுத பரிசோதகர்கள் ஈராக்கில் ஒற்றர் படையாக

## அந்நாட்டரசு குற்றச்சாட்டு



ஐக்கிய நாடுகள் ஆயுதப் பரி சோதனையாளர்கள் ஆயுதப் பரிசோ தனை என்ற பெயரில் தமது இரா ணுவப் பொருளாதார இலக்குகளை அமெரிக்காவிற்கு ஒற்றர்களாக இனங் காட்டி வருவதாகவும், இவ்வாறு ஆயுதப் பரிசோதகர்கள் காட்டும் இலக்குகளை வைத்து, அமெரிக்கா தம்மீது இராணுவ நடவடிக்கை யினை மேற்கொள்ளவுள்ளதாக ஈராக், ஆயுதப் பரிசோதகர்கள் மீது குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை, ஆயுதப் பரிசோத கர் சார்பில் பேசிய சர்வதேச அணு சக்தி முகவரகப் பெண் பேச்சாளர்- ஆயுதப் பரிசோதகர்கள் தமக்கு அளிக்கப்பட்ட கடமையினையே மேற கொண்டு வருவதாகவும், அதற்கு அப்பால் யாராவது அமெரிக்காவிற்கு புலனாய்வு வேலையை செய்வதாக இருந்தால், அவர்கள் பணியில் இருந்து உடனடியாக விலக்கப்படு வார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# கொக்காகோலாவுக்கு மலேசியாவில் எதிர்ப்பு




மலேசியாவில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அமெரிக்க - மென் குளிர்பானமான கொக்கா கோலாவினை நுகவர்தில்லை என்ற பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்கா, முஸ்லிங்களின் விவகாரங்களில் தேவையில்லாமல் தலை யிடுவதனால், இவ் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதாக மலேசிய நுகர் வோர் சங்கம் தெரிவித்துள்ளது. மேற்படி சங்கம், ஐரோப்பிய ஊடகம் ஒன்றிற்கு தகவல் அளிக்கையில் - முஸ்லிங்களின் விவகாரங்களில் அமெரிக்கா "பயங்கரவாதம்" என்ற பெயரில் தொடர்ச்சியான தலையீடு களையும், இடர்களையும் ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளது

அமெரிக்காவினது இச்செயற்பாடனது, முஸ்லீம் மக்களுக்கு மட்டுமல்ல உலகின் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் எதிரானது என நட்ஸிம் என்ற அந்த நுகர்வோர் சங்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க எதிர்ப்புணர்வு முஸ்லிம் நாடுகளில் அதிகரிப்பு



உலகளாவிய கணிப்பீட்டின்படி அமெரிக்காவிற்கு எதிரான உணர்வ லைகள் உலகநாடுகளில் அதிக ரித்து வருவதாக தெரியவந்துள் ளது.

குறிப்பாக, உலகிலுள்ள முஸ் லிம் நாடுகளில் உள்ள சமூகங்கள் அமெரிக்கா மீது எதிரான உணர் வலைகளைக் கொண்டுள்ளனர். எகிப்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் மேலும் தீவிரமான எதிர் உணர்வலைகள் இருப்பதாகக் கணிப பீடுகள் காட்டுகின்றன.

உலகின் 44 நாடுகளில் 38,000 மக்களின் கருத்துக்கணிப்பு நடத் திய பெவ்·யு ஆராய்ச்சி நிறுவனமே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கருத்துக்கணிப்பில் சில சுவா ரஸ்யமான தகவல்களும் கிடைத் துள்ளன. ஒரு சிலர் அமெரிக்காவின் ஹோலிவூட் திரைப்படங்கள், அமெ ரிக்காவின் சங்கீதம், தொலைக் காட்சிச் சேவைகள் என்பன தமக் குப் பிடித்தபோதும் அமெரிக்காவின் அரசியலைத் தாம் விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

# அமெ. விமான சேவை நட்டத்தில் முடக்கம்



அமெரிக்காவின் இரண்டு பிரபல விமானசேவை நிறுவனங்கள் நட் டத்தைச் சந்தித்துள்ளன. மேற்படி இரண்டு விமானசேவை நிறுவனங் களும், அவற்றின் கடன்களுக்கு சமஷ்டி அரசாங்கம் உத்தரவாதம் அளிக்காததால் பாதிப்படைந்துள்ளன.

விமானசேவை நிறுவனங்கள் தொடர்ந்து இயங்க வேண்டுமானால் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர் தேவையென கணக்கிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் யூனைட்டட் ஏயர்லைன் மற்றும் அதன் போட்டி நிறுவனங்கள் யூ.எஸ் எயர்வேஸ் என்பவையே பெரும் நட்டத்தைச் சந்தித்துள்ளன.


## பணிநிலை வெற்றிடங்கள்

நிதித்துறை ஆயப்பகுதியில் பின்வரும் பணிநிலைகளுக்கான வெற் றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**1.ஆய அலுவலர்**

**கல்வித்தகைமை**

- ❊ க.பொ.த(உ/த) இல் வர்த்தகப் பிரிவில் அல்லது கணிதப் பிரிவில் தேறியிருத்தல் வேண்டும்.
- ❊ க.பொ.த(சா/த) இல் தமிழ், கணிதம் ஆகியவற்றில் திறமைத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்: $\frac{2500\text{-}3100}{10 \times 60} + 2000 = 4500$

**2.ஆய உதவியாளர்**

**கல்வித்தகைமை**

- ❊ க.பொ.த (சா/த) இல் கணிதம், தமிழ் ஆகியவற்றில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

வேண்டுகை முடிவு நாள்: 12.12.2002 வியாழக்கிழமை

வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:

விளம்பர இல. 5,
நமது ஈழநாடு,
இல. 267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

மேற்குறிப்பிட்ட பணி நிலைகளுக்கு வேண்டுகைகளை அனுப்பியவர்க ளுக்கான

**நேர்முகத்தேர்வு**

16.12.2002 காலை 10 மணி தொடக்கம் மாலை 1 மணி வரை பளை ஆயப்பகுதி கண்காணிப்பு நிலையத்தில் நடைபெறும்.

*குறிப்பு:*

- ❊ நேர்முகத் தேர்வின்போது அனைத்துக் கல்வித் தகைமைச் சான்றுகளுடனும் சமூகம் தரவும்.
- ❊ பணியாளர்களுக்கான தங்குமிடம் உட்பட குறைந்த கட்ட ணத்தில் உணவு வசதி செய்து தரப்படும்.

**மனித வள அலகு,**
**ஆயப்பகுதி,**
**தமிழீழ விடுதலைப்புலிகள்.**

---

நிதித்துறையில் பின்வரும் பணி நிலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரிகளிடமிருந்து வேண்டு கைகள் கோரப்படுகின்றன.

❒ கணக்காளர் ❒ மேலாளர் ❒ மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்

பயிற்சிக்காலச் சம்பளம் 6500 /=

- ❍ பொருத்தமானவர்கள் தமது சுய விபரத்துடன் 09.12.2002 திங்கட் கிழமை காலை 9 மணிக்கு பளை வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமூகம் தரவும்.
- ❍ வேலையற்றோர் பட்டதாரிகள் சங்கம் ஊடாக வேண்டுகைகளை அனுப்பியவர்களுக்கு நேர்முகத் தேர்வுக் கடிதங்கள் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

**நிதித்துறை,**
**தமிழீழ விடுதலைப்புலிகள்.** (58)


## உலகவலம்

### ஈராக் மீதான கெடுபிடிக்கு இந்தியா, ரஷ்யா எதிர்ப்பு

அமெரிக்கா - ஈராக் மீது தாக்குதல் நடத்துவதனை இந்திய, ரஷ்யத் தலைவர்கள் எதிர்த்துள்ளனர்.

ரஷ்ய ஜனாதிபதி புட்டின், இந்தி யாவிற்கான விஜயத்தினை மேற் கொண்ட போது, புதுடெல்கியில் இந்திய பிரதமர் வாஜ்பாயுடன் கூட் டாக அறிக்கையினை வெளியிட்டுள் ளார். ஈராக் மீது இராணுவத் தாக்கு தலுக்குப் பதிலாக, அரசியல் இராஜ தந்திர நடவடிக்கைளின் மூலம், ஈராக் கின் அழிவுதரும் அணு, இரசாயன, உயிரியல் ஆயுதங்களைக் களைய வேண்டும் என அந்தக் கூட்டறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நிறஞ்சனாஸ் சங்கானை
வண்டமி நடித்த
BLACK EAGLE
11.00, 2.45, 6.00, 7.45
6ஆம் திகதி முதல்
நேருக்கு நேர்
(சி-187)

ராஜா
யாழ்ப்பாணம்.


நான்காவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)




பலஸ்தீன அதிகாரசபை வளாகத்தின் மீது இஸ்ரேலிய ஹெலி புதனன்று நடாத்திய தாக்குதலின்போது...



சிதைவடைந்த வளாகத்தில் மீட்புப் பணியாளர்




சிதைவைப் பார்த்து அலறும் பலஸ்தீனியர்

# தவறான பாதையில் அரசு போகின்றது; இந்தியா தலையிட அனுரா கோரிக்கை!

(புதுடெல்கி)

ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட தூதுக்குழுவாகச் சென்ற அனுரா பண்டாரநாயக்க தலைமையிலான பொ.ஐ.மு. நாடாளுமன்றக் குழு



நேற்று முன்தினம் காலை இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளது.

இச்சந்திப்பினைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அனுரா பண்டாரநாயக்க, சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் தவறான வழியில் கொண்டு செல்வதாக, வாஜ்பாய்க்கு விளக்கிக் கூறியதாகத் தெரிவித்தார்.

மேலும் - 1995 இல் ஜனாதிபதி சந்திரிகாவே புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்ததாகவும், ஆனால் இப்போது அரசாங்கம் பிழையான வழிகளில் பேச்சுக்களை நடத்திச் செல்வதாகவும் அனுரா பண்டாரநாயக்க குறிப்பிட்டார்.

அத்துடன், பேச்சுக்கள் தொடர்பாக தவறான பிரசாரங்களை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் - இதனைக் கட்டுப்படுத்த இந்தியா உதவவேண்டும் எனவும் - பேச்சுக்களில் மூன்றாவது தரப்பாக இந்தியா பங்கேற்க வேண்டும் என்றும் வாஜ்பாயிடம் தாம் கோரிக்கைகளை முன் வைத்ததாகவும் அனுரா பணடாரநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்தான விசேட செய்தி ஒன்றையும் வாஜ்பாயிடம் அனுரா பண்



டாரநாயக்க நேரில் கையளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடிச் சம்பவம்; புலிகளுக்குத் தொடர்பில்லை!

## மட்டு. அரசியல்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஓட்டமாவடிப் பகுதியில் இராணுவத்தில் பணியாற்றிய முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்று விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறை வெளியிட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டு விவாதத்தை கூட்டமைப்பு எம்.பிக்கள் புறக்கணிப்பர்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு விவா்தத்தில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று தெரியவருகின்றது.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி நடைபெறவிருக்கும் மேற்படி விவாதத்தின்போது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் சபைக்குச் சமுகம் கொடுப்பதில்லை என்று தீர்மானித்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

# கனேடியநாட்டு சமஷ்டி முறையே இலங்கைக்குப் பொருத்தமானது!


## கனேடிய நிபுணர்கள் தெரிவித்ததாக கருணா

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் நேற்று முன்தினம் நடந்த பேச்சுக்களின்போது, பாதுகாப்பு உபகுழுவை விஸ்தரிப்பது குறித்தும் சமஷ்டி முறையிலான தீர்வு குறித்தும் ஆராயப்பட்டதாக பேச்சுக்களில் புலிகள் தரப்பு பிரதிநிதியாகக் கலந்து கொண்ட கேணல் கருணா தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளுக்கு இடையில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமஷ்டி முறையிலான தீர்வு முறைகள் குறித்து கனடிய அரசியல் அமைப்பு நிபுணர்கள் மேலதிக விளக்கங்களை அளித்ததாகவும்- இதில், இந்திய சமஷ்டியை விட கனேடிய சமஷ்டி முறையே வலுவானதென்றும், இலங்கைக்கு இதுவே சரியான தீர்வாக அமையும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.



கனேடிய சமஷ்டி முறையில் கூடியளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புலிகளின் சுயாட்சிக் கோரிக்கைக்கு கனேடிய முறையே சரிவரும் எனக் கனேடிய அரசியலமைப்பு நிபுணர்கள் தெரிவித்ததாகவும், அடுத்துவரும் பேச்சுக்களில் இது குறித்துப் பேசப்படும் என்றும் கேணல் கருணா மேலும் தெரிவித்துள்ளார்.

### உதவிப் பிரதேச செயலராக சிவபுண்ணியம்

கரவெட்டி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலராக இ.சிவபுண்ணியம் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலராக கடமையாற்றிய செ.ஸ்ரீனிவாசன் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ச)

# குடாநாட்டு மீனவர்களுக்கு 1000 படகுகள் வழங்கப்படும்!

## கடற்தொழில் அமைச்சர் நாடாளுமன்றில்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டு மீனவர்களுக்கு ஆயிரம் படகுகளை வழங்கவுள்ளதாக கடற்தொழில் அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார். அத்துடன், யாழ். குடாநாட்டுக் கடற் றொழில் அபிவிருத்திக்கு என 1950 மில்லியன ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக கடற்தொழில் அமைச்சிற்கான குழுநிலை விவாதம் நடைபெற்றபொழுது அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், தமது அமைச்சு ஒரு போதும் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது எனவும் அவர் உறுதி கூறியுள்ளார்.

# புலிகளின் அரசியல் அலுவலகங்களில் பொது மக்களின் முறைப்பாடுகள்!

## இராணுவப் புலனாய்வுத்துறை அறிக்கை

(கொழும்பு நிருபர்)

புலிகள் வட- கிழக்குப் பகுதிகளில் திறந்துள்ள அரசியல் துறை அலுவலகங்கள் - பொலிஸ் நிலையங்கள் போன்று செயற்பட்டு வருவதாக இராணுவப் புலனாய்வுத்துறை அரசாங்கத்தை எச்சரித்திருக்கின்றது.

வட- கிழக்குப் பகுதிகளில் புலிகள் 48 அரசியற்துறை அலுவலகங்களை திறந்துள்ளனர். இங்கு பொதுமக்களின் முறைப்பாடுகள் ஏற்கப்படுவதாகவும் - மேலதிக நடவடிக்கைகளுக்காக விசாரணைகள், புலிகளின் நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படுவதாகவும், அரச உயர் மட்டத்துக்கு அனுப்பப்பட்ட புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

# ரவூப் ஹக்கீம் - அதாவுல்லா மோதல் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அதிருப்தி!

(கல்முனையிலிருந்து சலீம்)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் தோன்றியுள்ள பிளவுகள் குறித்து கிழக்குப் பகுதி முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை தோன்றியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் அதாவுல்லாவுக்கும், அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல்களால் கிழக்கு மாகாண மக்கள் வெறுப்படைந்திருக்கின்றனர்.

சமாதானப் பேச்சுகள் நடைபெறும் சூழலில், இத்தகைய தேவையற்ற பிரச்சினைகளைக் கிளப்பி, முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய சந்தர்ப்பத்தை நழுவவிடும் நிலை தோன்றியிருப்பதாக இப்பகுதி முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

இதனால், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மீது வெறுப்படையும் நிலையில் இப்பகுதி மக்கள் இருப்பதாகவும், பிரதான அரசியல்வாதிகள் தமக்கிடையிலான அதிகாரப் போட்டி மற்றும் தன்னிச்சையான போக்குகளுக்கு ஒட்டுமொத்த முஸ்லிகளின் நலனைப் பலியிடுவதாகவும் இம் மக்கள் கருதுகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பெரிதும் கவலையடைந்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (07)

# வருடாந்தம் 20 ஆயிரம் தாதிமாரை புதிதாக உருவாக்க அரசு திட்டம்

## - வெளிநாட்டு வேலை வாய்ப்பும் உள்ளது -

(கொழும்பு)

வருடாந்தம் 20 ஆயிரம் தாதிமார்களை உருவாக்கி உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளில் சுகாதாரத் திணைக்களம் இறங்கியுள்ளது.

தாதிமாருக்கு வெளிநாடுகளில் அதிகமான வேலை வாய்ப்புகள் உள்ளன. அங்கு நல்ல சம்பளமும் வழங்கப்படுகின்றது. அதுபோலவே உள்நாட்டிலும் அரச, தனியார் துறை வைத்தியசாலைகளில் தாதிமாருக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

அரச வைத்தியசாலைகளில் 25 ஆயிரம் தாதிமாருக்கும், தனியார் துறையில் 15 ஆயிரம் பேருக்கும் வெற்றிடங்கள் உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டே சுகாதாரத் திணைக்களம் தாதிமாரைப் பயிற்றுவிக்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளது.

அப்பலோ வைத்தியசாலை தாதிமாரைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# அடுத்த கட்டப் பேச்சுக்களின் நிகழ்ச்சி நிரலும் ஆராய்வு!

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களில் அடுத்தடுத்த பேச்சுக்களில் எந்தெந்த விடயங்கள் இடம்பெறவேண்டும் என்பது குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

அடுத்த கட்டப் பேச்சுக்கள் தாய்லாந்திலும், ஜப்பானிலும் நடைபெறவுள்ளன. இந்தப் பேச்சுக்களில் என்னென்ன விடயங்கள் குறித்து பேசுவது என்பது பற்றி நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுக்களில் முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

# மேஜர் ஜெனரல்கள் 55 வயதுவரை பணியில் இருக்க சட்டத்திருத்தம்

## வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது

(கொழும்பு)

இராணுவத்தில் மேஜர் ஜெனரல பதவியில் இருப்பவர்கள் 55 வயது வரை சேவையில் இருப்பதற்கு வகை செய்யும் விதத்தில் இராணுவ அதிகாரச்சட்டம் திருத்தப்படடுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, இதுபற்றிய அறிவித்தலை வாத்தமானி மூலம் வெளியிட்டிருக்கின்றார்.

முன்னைய பிரமாணங்களின் படி, மேஜர் ஜெனரல் ஒருவர் தமது பதவியில் மூன்று ஆண்டு காலமே கடமை புரியலாம். அடுத்த பதவியுயர்வு அல்லது சேவை நீடிப்பு ஜனாதிபதி வழங்காவிட்டால், மேஜர் ஜெனரல் 55 வயதை அடையாவிட்டாலும், தமது பதவியில் இருந்து ஓய்வுபெற வேண்டியிருந்தது.

புதிய வர்த்தமானி அறிவித்தலின்படி, மேஜர் ஜெனரல் ஒருவர் தமது சேவையில் 55 வயதுவரை பணியாற்றலாம். இதன் பிரகாரம், தற்போது இராணுவத்தலைமை அதிகாரியாகவுள்ள மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன ஆகக் கூடிய காலத்தை பூர்த்தி செய்த போதிலும், தொடர்ந்து 55 வயது வ்ரை பணியாற்ற இந்தச் சட்டம் வழிவகுத்துள்ளது குறிப்பிடத்தககது.

## கடந்த மாதம் குடாநாட்டில்

# விசர் நாய் கடிக்கு உள்ளான 170 பேருக்கு சிகிச்சை

யாழ். குடாநாட்டில் விசர் நாய்க் கடிக்குள்ளாவோரின் தொகை அதிகரித்துள்ளதாக வைத்திய சாலைப் புள்ளி விபரங்களிலிருந்து தெரியவருகின்றது.

கடந்த மாதம் மட்டும் நூற்று எழுபது பேர், யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி, அரியாலை, யாழ். நகர் பகுதிகளிலே விசா்நாய்க் கடிககுள்ளாவோரின் தொகை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, விசா்நாய்க் கடிககுத தடுப்பு ஊசிமருந்தான ஏ.ஆர்.எஸ ஒரு வாரத்துக்கு மட்டும் கையிருப்பில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தொிவித்துள்ளன. (ச)

# மக்களின் இயல்பு வாழ்வைச் சிதைக்கும் குருநகர் 'உயர் பாதுகாப்பு வலயம்' !



புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து ஏற்பட்டுள்ள இச் சமாதான சூழ்நிலையில் அனைத்துப் பத்திரிகைகளிலும், அனைவராலும் பேசப்படும் விடயம் 'உயர் பாதுகாப்பு வலயம்' என்பதுதான். இது இலங்கையில், குறிப்பாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பரவலாகக் காணபடுகின்றது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால, இவ் உயர் பாதுகாப்பு வலயம், குருநகரிலும் இருப்பதுதான் அனைவருக்கும் வியப்பினை ஏற்படுத்துகின்ற ஒன்றாகும்.

குருநகர் என்பது யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் கரையோரப் பிரதேசம். இங்கு அநேகமான மக்கள் கடற்தொழிலை நம்பித்தான் வாழ்கிறார்கள. இவர்கள் அனைவரும் வறுமைக கோட்டிற்குட்பட்ட குடும்பத்தவர்களாகும். இங்குள்ளவர்கள் அன்றாடம் உழைத்துத் தான் சீவிப்பவர்கள். இப் பிரதேசம் யாழ்.மாநகர சபைக்குள் - பின் தங்கிய, சுகாதார வசதிகள் குறைந்த, அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாத ஓர் பிரதேசமாகும். இங்கு தான் உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ளது.

குருநகரில் நான்கு கிராமசேவையாளர் பிரிவுகள் உள்ளன. ஜே/67, ஜே/68, ஜே/69, ஜே/72 என்பனவாகும். இவற்றில் ஜே/67 கிராம சேவையாளர் பிரிவில் 52 குடும்பங்கள் குடியிருந்த 42 வீடுகளும், ஜே/68 கிராம சேவையாளர் பிரிவில் 185 குடும்பங்கள் குடியிருந்த 138 வீடுகளும், ஜே/69 கிராம சேவையாளர் பிரிவில் 72 குடும்பங்கள் குடியிருந்த 85 வீடுகளும், ஜே/72 கிராமசேவையாளர் பிரிவில் 15 குடும்பங்களும் குடியிருந்த 10 வீடுகளும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. குருநகரில் மொத்தமாக நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 275 வீடுகளும், லீலாஸ் ஸ்ரூடியோ கட்டடத்திற்கு அருகாமையில் 15 வீடுகளுமாக மொத்தம் 290 வீடுகள் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ளடங்கியிருக்கின்றன. இதனால் மொத்தம் 350 குடும்பங்களுக்கு மேல் இருப்பிடம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட- சிறுசிறு கிறிஸ்தவ, இந்து ஆலயங்கள், அரசாங்கக கட்டடங்கள், தனியார் கட்டடங்கள், சுங்கத் தொழிலாளர் விடுதி என்பனவும் இவ் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடங்கி உள்ளன.

1995 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம 30 ஆம் திகதி இவ்வீடுகளை, சொத்துக்களை இழந்து வெளியேறிய மக்கள் இன்னமும் தான் அங்கு போகமுடியாமல் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தற்காலிக கொட்டகைகளுக்குள்ளும், அரசாங்க கட்டடங்களிலும், தான் தமது காலத்தைக் கழிக்கின்றனர்.

பண்ணைப் பால. கடற்பரப்பிலிருந்து குருநகர் இறங்கு துறை வரையான பிரதேசத்தில், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கடற் தொழிலாளர்கள் இருக்கின்றனர். ஆனால், இவர்கள் அனைவரும் ஒரு வழியால்தான் கடற்தொழிலுக்கு செல்ல முடியும். இதனால் பல பிரச்சினைகள உண்டாகின்றன. எல்லாத் தொழிலாளர்களும் தங்களின் தொழில் உபகரணங்கள், தடிகள், பாய்மரங்கள் எனப் பல பொருட்களைக் கொண்டு செல்ல வேண்டும். இதனால் எல்லாத் தொழிலாளர்களும் ஒரே நேரத்தில் செல்ல வேண்டி ஏற்படுவதால்- இட நெருக்கடி, நேரப் பிரச்சினை, சண்டைகள் என்பன ஏற்படுகின்றன. முன்னைய காலங்களில் கடற்கரையோரங்களில் இருக்கின்ற வீடுகளிலிருந்து அப்படியே கடலுக்கு இறங்கி தொழிலுக்குச் செல்ல முடியும். வீடுகளுக்கு முன்னாலேயே வள்ளங்களைக் கட்டலாம். இப்போது அனைத்து வள்ளங்களும் இராணுவப் பாதுகாப்பில் ஒரே இடத்தில் நிறுத்த வேண்டும். இப்

## செய்திக் கட்டுரை



பிரச்சினைகள் எல்லாம் மேற்கூறப்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்தினாலே ஏற்பட்டுள்ளன.

குருநகரிலுள்ள இவ் உயர் பாதுகாப்பு வலயத்தினால் மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். ஏழு வருடங்களாக உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் இருப்பதால் இங்கு இட நெருக்கடி அதிகம். இதனால் பல சுகாதாரப் பிரச்சினைகள், பண்பாட்டு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பாடசாலை மாணவர்கள் இரவு நேரங்களில் படிக்க முடிவதிலலை. தற்போதைய மழை காலங்களில் வெள்ளமும், வீடுகளில் ஒழுக்கும் வீட்டுக்கு வீடு வாசலபடி என்பதுபோல் இருக்கின்றது. குருநகரில் உள்ள வீடுகள் அனைத்தும் யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்திருப்பதால் வீடுகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் இவ் வீடுகளில் குழந்தைகள், சிறுவர்கள் என எல்லோரும் நிம்மதியாக உறங்க முடியாத நிலையில் உள்ளனர். வீட்டு உரிமையாளர்கள் எவ்வளவு காலத்திற்கு தங்களின் வீடுகளில் மற்றவர்களையும் தங்க வைப்பார்கள்? தற்போது வன்னிப் பிரதேசத்திலிருந்தும் இங்கிருந்து இடம் பெயர்ந்து சென்ற மக்கள் மீளத் திரும்பியிருப்பதால் பாரிய இட நெருக்கடி நிலவுகின்றது.

எனவே, இவையனைத்திற்கும் தீர்வு காணவேண்டும் என்றால் குருநகரிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்க வேண்டும். உயா பாதுகாப்பு வலயத்தை நீக்கினாலும் உடனடியாக இப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. ஏனெனில் இவற்றுக்குள் இருக்கும் வீடுகள் அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் இருக்கின்றன. எனவே, இங்குள்ள மக்களுக்கு ஏதாவது வீடமைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தி அல்லது நிதி உதவிகள் வழங்கி முன்பிருந்தது போல் இப் பிரதேசத்தை வளமுள்ள பிரதேசமாக்க வேண்டும்.

யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி "உயர் பாதுகாப்பு வலயத்தை உடனடியாக நீக்க முடியாது" எனத் தெரிவித்துள்ளார். எனவே, இங்கிருந்த மக்கள் எவ்வளவு காலத்திற்கு உறவினர்களுடைய வீடுகளிலும், வாடகை வீடுகளிலும், தற்காலிக கொட்ட கைகளுக்குள்ளும் தங்கியிருக்க முடியும்?. இதை யாராவது சிந்திப்பார்களா? குருநகர் மக்களுக்காக யாரும் உயர் மட்டங்களில் கதைப்பார்களா? நிர்வாகங்களில் இருப்பவர்கள் ஏதாவது நடவடிக்கைகளை எடுபபார்களா?

**தேவராஜா விவிங்ஸ்டன்**

---

### வடக்கு - கிழக்கு பகுதிகளில்

# சேதமுற்ற பாலங்களைத் திருத்த 315 கோடி ரூபா பிரித்தானியா உதவி!

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்குப் பகுதியில் யுத்தத தால் சேதமடைந்த பாலங்களைப் புதிதாக அமைப்பதற்கு பிரித்தானிய நாட்டு நிறுவனம் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

வட- கிழக்குப் பகுதியில் சுமார் அறுபத்தியாறு பாலங்களை அமைப்பதற்கு மேற்படி நிறுவனம் நிதியுதவி வழங்கவுள்ளது.

இந்த உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் சுமார் 315 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

மேற்படி நிதி புனர்வாழ்வு அமைசசினூடாகவே வழங்கப்படவுள்ளதாகவும் இவ்விடயம் தொடர்பான ஒப்பந்தம் ஒன்று மிகவிரைவில் கைச்சாத்திடப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது. (க,லி)

# அஞ்சல் அலுவலகங்கள் தோறும் ஆலோசனைக் குழுக்கள்!

அஞ்சல் அலுவலக சேவைகளையும், செயற்பாடுகளையும் தரமுயர்த்துவது சம்பந்தமாக மக்களின் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் பெற்றுக்கொள்ள - அஞ்சல் அலுவலகங்களில ஆலோசனைக் குழுககளை அமைக்குமாறு அனைத்து அஞ்சல் அலுவலகங்களிறகும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆலோசனைக் குழுவில் இணைந்து சேவையாற்றுவதற்கு கல்வி, சட்டம், வியாபாரம், அரசியல், சமூகசேவை, பொறியியல், வேறு விசேட சேவைகள் சம்பந்தமான துறைகளில் ஆர்வமுள்ளவர்கள் அருகில் உள்ள அஞ்சல் அலுவலக அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (108)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் : சு.சங்கீத்

முகவரி : குருக்கள் மாவடி, மிருசுவில் வடக்கு



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------

பெற்றார் ஒப்பம்


### பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டநிதி

# கிளிநொச்சி மாவட்டத்திற்கு கூடுதலாக ஒதுக்கத் தீர்மானம்!

புதிய நிதி ஆண்டிற்கான பன்முக வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு அதிகளவு நிதி வழங்கப்படவுள்ளது.

இந்த ஆண்டுக்கான - பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்ட நிதி தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்தும் கடந்த செவவாயன்று கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் யாழ். மாவட்டப் நாடாளுமன்ற உறுப பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தமது பன்முகப்படுத்தப் பட்ட வரவு- செலவு திட்ட நிதியில் கணிசமான பகுதியை கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போது முன்வந்தனர்.

கிளிநொச்சி அரச அதிபர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே மேற்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## தெல்லிப்பளை வைத்தியசாலைக்குப் புதிய வாகனம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மனநோய் சிகிச்சைப் பிரிவுக்கு புதிய வாகனம் ஒன்று வழங்கப்படவுள்ளது. மேற்படி சிகிச்சைப் பிரிவின் நடமாடும் சேவைக்காகவே இவ்வாகனம் வழங்கப் படவுள்ளது. (க)

# குடாநாட்டில் வாந்திபேதி அபாயம்! ஆறுபேர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வாந்திபேதி நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது.

வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்ட ஆறு பேர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

மானிப்பாய், சுழிபுரம், கல்வியங்காடு, அல்லைப்பிட்டி, குருநகர் பகுதியில் இதன் தாக்கம் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில வாரங்களாகப் பெய்து வரும மழையினாலும், சுகாதரச் சீர்கேட்டினாலும், நடைபாதையில் விற்பனையாகும் உணவுப் பண்டங்களை உண்பதாலும் இத்தொற்றுநோய்த் தாக்கம் அதிகரிப்பதாக சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ச)




# ஊனம் ஒரு தடையல்ல என உரத்துக் கூறுகிறார்

**மேரி இமாக்குளாற்றா -**

**இரண்டு கால்களும் போலியோவின் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்தாலும் - துணிவும், திடமும் கொண்ட இவர், ஒரு வணிகமாணிப் பட்டதாரி. யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு எழுதுநராகக் கடமையாற்றி வருகிறார். அவரை இவ்வாரம் 'சிநேகிதியே....'க்காகச் சந்தித்தோம். மனந் திறக்கிறார் இமாக்குளாற்றா-**



பெண் குழந்தை அதுவும் ஒன்றரை வயது மட்டும் அதனுடைய இயல்பான மிடுக்குடன் மகிழ்ச்சியாக நடந்து திரிந்த பொழுதுதான் - இயற்கை வஞ்சித்து கொடிய போலியோ எனும் நோய்க்கு ஆட்படுத்தியது. இந்த நேரத்தில் என்னுடைய அப்பாவும் அம்மாவும் பாச உணர்வோடு உளவியல் ரீதியாகவும் தன்னம்பிக்கை ஊட்டி வளர்த்தார்கள்.

என்னுடைய வாழ்க்கையை நலிவடைய விடாது, அப்பா சிறு வயது முதல் தனது தோளில் சுமந்து சென்று பாடசாலைக்கு சேர்த்துவிட்டு, மீண்டும் பாடசாலை விட்டபின் அழைத்து வருவார். இயல்பாகவே இருந்த கற்றல் விருத்தி மூலம் சகல பாடங்களையும் ஆர்வத்துடன் கற்று வந்தேன். மூன்று சில்லுச் சைக்கிளில் அப்பாவின் உதவியுடன் பாடசாலைக்குச் சென்று வந்த நான், க.பொ.த.(சா.த.)ப் பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்பதற்காக அனுமதி கோரியபொழுது, எனது நிலையையும் அப்போது இருந்த போர்க்காலச் சூழலையும் கருத்திற் கொண்ட கன்னியர்மடம் பாடசாலை அதிபர் முதலில் மறுத்துவிட்டார். பல சிரமத்துடன் என்னை மீண்டும் பாடசாலைக்கு அனுமதித்தார்கள்.

என்னுடைய வகுப்பறை மேல் மாடியில் இருந்தபடியால் ஒவ்வொரு பாடத்திற்கும் இடம் மாறும்போது எனது அப்பா வந்து காவல் நின்று என்னைத் தூக்கியே விடுவார். குறிப்பாக கிறீஸ்தவ நாகரிகம் பாடத்திற்குக் கீழே வரவேண்டும். அந்தப் பாடவேளைகளில் அப்பாவின் உதவியுடனேயே வகுப்பிற்கு மாறிவருவேன்.

இவ்வாறு, கற்று க.பொ.த. உயர்தரம் 4 பாடங்களிலும் சித்தியடைந்தேன். எங்களுக்கு 180 புள்ளிகளுடனேயே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும். எனக்கு 227 புள்ளிகள் இருந்தும் போர்க்கால அனர்த்தங்களினால் உரியகாலப்பகுதியில் எனது படிவம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சென்று கிடைக்காததால், பல்கலைக்கழகக் கல்வியை இழந்தது பெரும் வேதனையாக இருந்தது. அந்தநிலையில் தான் வெளிவாரி மாணவியாக யாழ். பல்கலைக் கழகத்தில் பதிவுசெய்து நான்கு வருடங்களைக் கொண்ட வணிகமாணி கற்கைநெறியைத் தொடர்ந் தேன்.

இங்கு கற்றுக் கொண்டு இருக்கும்போதே ஊன முற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் கணக்கியல் எழுதுநராகப் பணி புரியும் வாய்ப்பும் கிடைத்தது. அங்கு நான் பார்த்த அளவில் அங்கக்குறைவுடைய ஒவ்வொருவரிடமும் ஏதோ ஒரு திறமை அதீதமாக இருப்பதை உணரமுடிந்தது. அங்கு என்னைப்போலப் பலர் பணிபுரிந்து வருகின்றார்கள்.

பின்னர் 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற எழுதுநர் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றினேன். அதில் கூடிய புள்ளிகளைப் பெற்று அரச அலுவலகத்தில் எழுதுநராகக் கடமையாற்றும் வாய்ப்புக் கிடைத்து. தற்போது யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவில் எழுதுநராகப் பணிபுரிகின்றேன். மூன்று சில்லுச் சைக்கிளில் வீட்டிலிருந்து வேலைக்குச் சென்றால், அங்கு சக்கர நாற்காலிக்கு மாறி அதிலிருந்தவாறே எனக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளைச் செய்து வருவேன். என்னால் செய்யமுடியாத சில வேலைகளைக் குறிப்பாக, உயரத்தில் இருக்கும் கோவைகளை எடுக்க வேண்டி ஏற்பட்டால் அலுவலகச் சிற்றூழியரின் உதவியுடன் எடுத்து வேலைகளைச் செய்வேன்.

தற்போது அதாவது, 2002 ஆம் ஆண்டில் நான் எனது வணிகமாணிக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்து வணிகமாணிப் பட்டதாரியாக இருக்கிறேன். இன்னும் நான் பல பரீட்சைகள் எடுத்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதே எனது இலட்சியம், என்கிறார் மேரி இமாக்குளாற்றா.

***இன்னும் சிகரங்களை எட்ட இவரை வாழ்த்துகின்றோம் நாமும்.***

● **நேர்காணல்- கலா, உஷா**

# அழகுக் குறிப்புகள்

✷ நல்லெண்ணெயில் வேப்பம் பூ போட்டுத் தலைக்குத் தேய்த்துக் குளித்தால் பொடுகு நீங்கும்.

✷ சீயக்காய் அரைக்கும் பொழுது வழக்கமாக அதனுடன் சேர்க்கும் சாமான்களோடு பூந்திக்காய் என்பதை (ஆயுர்வேத மருந்துக் கடைகளில் கிடைக்கும்) உடைத்து அதன் தோலைக் கலந்து அரைத்தால் சீயக்காய் பவுடர் தலைக்குத் தேய்க்கும்போது ஷாம்பூ போல் நன்கு நுரைவரும். தலைமுடி பளபளப்பாகவும் மிருதுவாகவும் இருக்கும்.

✷ தயிருடன் (புளிப்பில்லாதது) சிறிது கஸ்தூரி மஞ்சள் பொடியைக் கலந்து முகத்தில் தடவி வர முகத்தின் தசைகள், வெண்மையாகவும், மென்மையாகவும், பளபளக்கும். வெடிப்பு, பரு போன்றவைகளும் வராது. தொடர்ந்து இரு வாரங்கள் தடவி வந்தாலே நல்ல மாற்றத்தைக் காணலாம்.

✷ வறண்ட சருமத்தை உடையவர்கள் செலவில்லாமல் - **விட்டமின் 'ஏ'யையும், விட்டமின் 'சி'யையும் பெற,** நெல்லிக்காய், கச்சான், எலுமிச்சம்பழம் இவற்றுடன் உதிர்ந்த ரோஜாக்களின் இதழ்களையும் சாப்பிடலாம்.

✷ முகப்பருவிற்கு உள்ளிப் பூண்டை நறுக்கிப் பருவின் மேல் தடவினால் புண் விரைவில் ஆறும். பருவின் தீவிரம் அதிகமாக இருந்தால் ஒரு பல் பூண்டை நசுக்கி ஒரு சொட்டுத் தேன் கலந்து பருவின் மேல் தடவலாம்.


✷ 10 - 15 செவ்வரத்தம் இலைகளைப் பறித்து



அம்மியில் வைத்து நன்றாக அரைக்கவும். பின் இதனை சீயாக்காய் தூளுடன் கலந்து நீராடுங்கள். ஷாம்பூக்கள் தலைக்கு உகந்ததல்ல. அதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இயற்கை மூலிகைகளால் தலைமுடியைக் கழுவினால் தலைமுடி என்னமாய் பளபளக்கும் தெரியுமா?

✷

# அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்






சிந்தி,

உன் ஊரவளான அமலா பற்றி ஊருக்குள் பரப்பப்பட்டுள்ள வதந்தி பற்றி எழுதி, குமுறியிருந்தாய்.

இளம் வயதிலேயே தனது திறமையினால் மேலதிகாரிகளின் பாராட்டுக்களையும் நல்லபிப்பிராயத்தையும் பெற்று பதவி உயர்ச்சியுடன் அமலா ஓர் அதிகாரியாகப் பணியாற்றுவதாகவும், ஆனால் அவளை மேலதிகாரிகளுடன் இணைத்து வதந்திகளைப் பரப்பி அவளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்படுவதாகவும் எழுதியிருந்தாய்.

இது ஒன்றும் புதிய விடயமல்லவே. காலங்காலமாக நடந்து வருவதுதான்.

உடலில் பாதிப்பை ஏற்படுத்தும் சண்டை செய்பவர்கள் உடலின் முக்கியமான பகுதிகளைத் தாக்கி எதிரியை நிலை குலையச் செய்வதுபோல், மனத்தையும் சில முக்கிய விடயங்கள் மூலம் தாக்கி ஒருவரைப் பலவீனமடையச் செய்யலாம்.

இந்த யுக்தியைப் பிரயோகித்து மனதைப் பலவீனமடையச் செய்வதன் மூலம் எதிரியை வெற்றிகொள்ளும் திறமைசாலிகள் பலரிருக்கிறார்கள்.

இத்தகையவர்கள் நமது சமூகத்தில் பிரயோகிக்கும் ஏவுகணைகளில் ஒன்று, இப்படி ஓர் ஆணும் பெண்ணும் முறைகேடான உறவு வைத்திருக்கின்றார்களென்றொரு வதந்தியைப் பரப்புவதாகும்.

இது ஆணுக்கும் நடக்கிறது. பெண்ணுக்கும் நடக்கிறது. ஆணுடைய பிரபல்யம், புகழ் இவற்றைக் குறைக்கவும் இந்த வதந்தி பரப்பும் முறையைப் பயன்படுத்துகிறார்கள். ஆண்களை இது பாதிக்காதென முற்றுமுழுவதுமாகக் கூறிவிட முடியாது. எமது சமூகத்தில் உயர் அந்தஸ்து, புகழ் உடையவர்கள் தவறான நடத்தை கொண்டவர்களென அறியும் போது, வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாதவிடத்தும் அவர்களது மதிப்பு குறைவது உண்மையே.

ஆனால் ஆணைவிடப் பெண்ணே பெரிதும் பாதிக்கப்படுகிறார். அதிலும் ஓர் ஆணைப் பற்றி அவதூறு பரப்ப வேண்டுமென்பதற்காக, ஒரு மூலையில் இருக்கும் பெண்ணுடன் இணைத்து வதந்தி பரப்பப்படும் போது அவள் படும் வேதனை மிகுந்த பரிதாபத்திற்குரியது.

இவ்வாறு தனது மேலதிகாரியுடன் இணைத்துப் பேசப்பட்ட பெண்ணொருத்தி, தன் வேதனைகளை என்னிடம் கூறிக் கண்ணீர் விட்ட சம்பவம் என் மனதில் ஆழப் பதிந்துள்ளது. பாவம்! எந்தத் தவறுமே செய்யாத அவள் சிலரது சதியால் தேவையில்லாது பாதிக்கப்பட்டிருந்தாள்.

தனது திறமையால் முன்னேறும் பெண்ணின் முன்னேற்றத்தைச் சகிக்காதவர்களும் இப்படிச் செய்கிறார்கள். இதைத் தாங்கிக் கொண்டு முன்னேறும் மனஉறுதி அவளுக்கு இருந்தேயாக வேண்டும். இதனால் தளர்ச்சியடையக் கூடாது.

பொய் வதந்திகள் பொய்யானவை என மற்றவர்களுக்குப் புரியவைக்கவும் முயல வேண்டும்.

எமது சமூகமும் இப்படிப்பட்ட வதந்திகளுக்குக் காது கொடுத்து அதைப் பெரிதுபடுத்தி அலசி ஆராயும் போக்கை மாற்ற வேண்டும். உண்மையல்லாத, யாரோ சொல்லும் ஒரு கதையைப் பெரிதுபடுத்துவதனால் என்ன பயன்? மற்றவர்களைப் பற்றிப் பேசுவதில் நேரம் போக்கும் நிலை மாறவேண்டும். அதிலும் ஒருவரைப் பற்றி நல்லதைப் பேசலாம். கூடாததைப் பேசுவதில்லை என்று ஒவ்வொருவரும் தீர்மானம் எடுக்க வேண்டும். வதந்தி பரப்பும் ஒருவரைக் கண்டால் இந்த அறிவுரையை அவருக்கு கூறு.

அமலாவை அணுகி, அவளுக்கு மனத் தைரியம் ஊட்ட வேண்டிய பொறுப்பு உன்னுடையது. இத்தகைய குருவிச்சை அவளது மனதைப் பாதிக்கக்கூடாது. 'நான் நேர்மையானவள், திறமையானவள், என்னால் எதிர்நீச்சல் போட முடியும்' என்ற உறுதியை அவளது மனம் பெற வேண்டும்.

அன்புடன்

யோசி

# கவிதைச்சோலை

## கவிதை வரும்



காதலுக்காக மட்டும் தான்
கவிதை வரைய முடியுமா!
தனித்திருந்து கண்ணீர் விடுங்கள்
உடைந்து போன காதலுக்காகவல்ல
மரத்துப் போன மனங்களுடன்
உலாவும் மனிதங்களுக்காகவும்
அடையமுடியா ஆசைகளை
அடிமனதில் தேக்கி வைக்கும்
குரல் தெரியா உயிர்களுக்காகவும்
உயிருடன் நடமாடும்
விழியற்ற நெஞ்சங்களுக்காகவும்
தனித்திருந்து தவியுங்கள்!
வாழ்வினையும் சாவினையும்
ஒரே தராசில் பார்க்கும்
வாலிபங்கள் எங்கே?
பிஞ்சு மனங்களை அடிமையாக்கும்
முட்டாள்கள் எங்கே?
இப்படி எத்தனைக்கோ
அத்தனைக்கும் கவி வடியுங்கள்!
காதல் தான் கவியின் கருவல்ல
என் வாழ்வின் சோதனை
என்னுடன் என்று
கவி வடியுங்கள்
கவிதை வரும்!

நீர்வையூராள்
சி.நளாயினி


## அன்னையின் அரவணைப்பில்...!



அன்னையின் அரவணைப்பில்
அகமகழ்ந்தேன் அன்று – அவள்
அன்பு மழை தனிலே
எனை மறந்து நின்றேன்
உண்மை அன்பிற்கும்
உன்னத வாழ்விற்கும்
நல்ல பண்பிற்கும் நாம்
அடையும் பயனுக்கும் – முதல்
வழிகாட்டியாக இருப்பவள்
எம் அன்னை.
பாசத்தைத் தாயிடம்
பாலாக நான் சுவைத்தேன் – நல்ல
பண்புதனை அவள் எமக்குத் – தன்
பாலோடு தந்துவிட்டாள்
வளர்ந்து விட்ட எந்தனிற்கு – நல்ல
வழிகாட்டியாய் நின்றாள் – அந்த
அன்னையின் அரவணைப்பை – நாம்
என்றென்றும் மறவோம்.

சு.சுகதினி
இணுவில்.

# DOUBLE HEART



*தேவையான பொருட்கள்*
கேக்
ஐசிங் சுகர்
மாஜரின்
கலரிங்
சுடுநீர்

*செய்முறை:-*

உறுதியானதும் வளையாததுமான ஒரு Board இல் கேக்கினைத் திருப்பிப் போடவும். பின் Double Heart மாதிரி உருவை வைத்து கத்தியை செங்கத்தாகப் பிடித்து வெட்டி எடுக்கவும். பின்னர் கேக்கின் தூள் களை அகற்றிய பின், சுடுநீர் கொண்டு அழுத்தும் கத்தியால் கேக்கின் தூள்கள் அமருமாறு Smoothing செய்யவும். பின்னர் கீறிமாக அடித்த மாஜரீனை, கேக்கின் எல்லாப் பாகங்களிற்கும் பூச வேண்டும். அதன்பின் நீல நிறத்தில் Heart butter Iceing குழைத்து Heart இன் ஒரு பகுதிக்கு வட்டம் வட்டமாகத் தட்டி, அழுத்தும் கத்தியால் அழுத்தவும். மற்றைய Heart இற்கு இளம் சிவப்பு (Pink) கலர் Heart butter Iceing குழைத்து மேற் கூறியவாறு செய்யவும். பின்னர் சுடுநீர் கொண்டு அழுத்தும் கத்தி யால் நன்றாக அழுத்தவும். நீலநிறக் கலர் Soft Butter Iceing குழைத்து நீலநிற Heart கேக்கின் ஓரங்களுக்கு Basket Nosal ஆல் போடவும். அதேபோல், இளஞ்சிவப்பு Pink Heart கேக்கிற்கு Pink கலர் Soft Butter Iceing குழைத்து கேக்கின் ஒரங்களிற்கு Basket Nosal ஆல் போடவும். மேல், கீழ் விளிம்புகளிற்கு Pink கலர் Heart கேக்கிற்கு Pink கலர் Star Nosal ஆல் போடவும். அதேபோன்று, நீலநிற Heart கேக்கிற்கு நீலக் கலரினால் Star Nosal ஆல் போடவும். பூக்கள் வைப்பதாயின் இரண்டு Heart இன் இருபக்கத்திற்கு வைக் கலாம். அல்லது இரண்டு Heart இன் நடுப்பகுதியிலும் வைத்து அலங்கரிக்கலாம். இவ் ஐசிங் கேக்கானது திருமண வைபவத்திற்கும், பதிவு திருமணத்திற்கும் மட்டும் செய்யலாம்.


# அழகும் அலங்காரமும்

– திருமதி யோகினி சண்முகநாதன்.



திருமணம் என்பது மறக்க முடியாத இனிய திருநாள். இந்த இனிய நாளிலே பெண்ணை அலங்கார தேவதையாக அலங் கரித்து விடுவது ஒவ்வொரு நாட்டிலும், அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் வழக்கமாகி விட்ட ஒன்று. சிறந்த அனுபவம் பெற்றிருக்கும் நிபுணர்களா லேயே மணப்பெண்ணை அற்புதமாக அலங்கரிக்க முடியும். செய்யப்படும் Make - Up மிக அதிக ஆடம் பரமாக தெரியக் கூடாது. மணப்பெண்ணின் தோற் றம், நிறம் மற்றும் முகத்தின் வடிவத்திற்கேற்ப அலங்காரம் அமைய வேண்டும். அதேநேரத்தில் மணப்பெண் தனிச்சிறப்புடன் தோன்றும்படியும் இருக்க வேண்டும். மணப்பெண் ஒப்பனைக்கு உப யோகிக்கப்படும் Make - up சாதனங்கள் யாவும் தரமானவையாக இருக்க வேண்டும். காரணம் மணப்பெண் ஒப்பனை நீண்ட நேரம் கலையாமல் இருப்பது மிகவும் முக்கியமா னது. குறிப்பாக பெண் ணின் சரும நிறத்திற்கு ஏற்ப Foundation, Pow- der முதலியன தெரிவு செய்ய வேண்டும். திரும ணம் செய்யப் போகும் பெண்ணின் முகம் கருமையா கவோ அல்லது பொலிவில்லாமலோ இருந்தால் திரு மணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன், முகத்திற்கு Bleaching அல்லது Facial செய்து கொள்ள லாம். இதனால் சருமம் நல்ல பொலிவுடனும், மென்மையாகவும், தோற்றமளிப்பதோடு Make-up உம் சருமத்தில் நன்றாகப் படிந்து நீண்டநேரம் கலையாமல் அழ காக இருக்கும். மேலும் திருமணத்திற்கு முன் புருவங்களை சீர் செய்வது முக்கியம். நேர்த்தியான புருவங்கள் முகத்தின் அழகில் முக்கிய இடம் வகிக்கின்றன. Threading அல்லது Tweezing முறையினால் இதை சீர்செய்து கொள்ளலாம். Threading ஐ அதில் அனுபவப்பட்டவர்கள் மூலம் செய்துகொள்ளலாம். Tweezing தாமே தமக்கு இலகுவாக செய்து கொள்ளலாம். மணப்பெண் அலங்காரத்திற்கு எப்போதும் நாம் Loose face Powder உபயோகிப்பது மிகவும் நல்லது. Compact face Powder பருக்கள் உள்ள முகங்களிற்கு போடக்கூடாது. இதில் Liquid foundation கலந்திருப்பதால் பருக்கள் உள்ள முகங்களிற்கு பயன் படுத்தக் கூடாது. மேலும் முகத்திற்கு Make- up போடும்போது கழுத்து, காதுகளை சிலர் மறந்துவிடுவ துண்டு. கழுத்து, காதுகளுக்கும் Foun- dation பூசி Powder போடவேண்டும். கைகள் நிறம்குறைவாக இருந்தால் கைகளுக்கும் இவ்வாறு பூசிக்கொள்ளலாம். இமைகளின்மேல் Eye shadow பூசும்போது ஆடையின் நிறத்திற்கேற்ப பூசுவதுதான் வழக்கம். அனால் மணப்பெண்ணின் கூரைச்சேலை பொதுவாக சிவப்பு நிறங்களில் அமைவதால், நாம் அதே நிறத்திற்கேற்ப Eye Shadow பூசுவது பொருத்தமாக அமையும். இமைகளுக்கு Eyeliner பயன்படுத்தும்போது Water Proof கொண்டவைகளை உப யோகிப்பது மிகவும் நல்லது. கண்இமைகளின் முடிகள் கருமையாகவும், அடர்த்தியாகவும், நீளமாகவும் தெரிவதற்கு Maskara பூச வேண்டும். இதற்கும் Water Proof Roleon Maskaraவை Brush ஆல் பூசவேண்டும். இறுதியாக Lipstick பூசிக்கொள்ள முன்னர் Lip pencil மூலம் உதடுகளுக்கு ஏற்ப சீராகக் கோடுகள் கீறி, நல்ல சிவப்பு, மரூன் நிறங்களில் அவரவர் சரும நிறங்களிற்கேற்ப போட்டுக்கொள்ள வேண்டும். Make - up முடிந்த பின், மணப்பெண்ணுக்கு தலையலங்காரம் செய்யும்போது, தலையில் இரண்டு அல்லது மூன்று நிறங்களிற்கு மேல் மலர்கள் இடம்பெற்றால் பார்ப்பதற்க அவ்வளவு நன்றாக இருக்காது. சடைநாகம், தலையில் வைக்கும் மலர்கள் யாவும் இயற்கை மலர்களாக இருப்பதே கூடுதலாக அழகாகவும், மங்களகரமானதாகவும் இருக்கும். நகைகள் அணியும்போதும் சிவப்பு, வெள்ளைக்கல் நகைகள் அல்லது வெள்ளைக்கல் அல்லது முத்து நகைகள் அணிவது பார்க்க அழகாக இருக்கும். பல நிறங்கள் கொண்ட கற்கள் பதித்த நகைகள் நன்றாக இருக்காது. மொத்தத்தில் ஒரு திருமணப்பெண்ணை தக்க முறையில் அலங்கரிப்பவர்களை, அந்தப் பெண் வாழ்நாளில் மறக்கவே மாட்டாள். ஏனெனில் திருமணநாள் அவள் வாழ்வின் பொன்நாள்.

(தொடரும்)



# நோய் தீர்க்கும் வெங்காயம்...

பன்னெடுங்காலத்திற்கு முன்பே எம்மண்ணில் இவ் வெங்காயம் விளைந்து வந்திருக்கிறது என்பதை வரலாற்றின் மூலமாக அறிகிறோம்.

சமையலுக்கு மணமூட்டுவதே வெங்காயந்தானே! மற்றும் உணவுக்கு சுவை சேர்ப்பதும் வெங்காயம் தான். வெங்காய சாம்பாறின் சுவையறியாத மக்கள் உண்டா?

மேலும், பலகாரங்களில் எடுத்துக் கொண்டால், வெங்காய உப்புமா, வெங்காய பகோடா, வெங்காயத் தோசை, வெங்காய வடை என்று எத்தனையோ வகை கள்! இவைகளுக்கு இன்னும் சுவை கூட்ட வெங்கா யச் சட்டினி, வெங்காயத் தயிர், சம்பல் என்று வகை வகையாக கூறிக் கொண்டே போகலாம்.

வெங்காயம் ஒரு சிறந்த ஊட்டப் பொருள். உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களும், தாது உப்புக்களும் இதில் நிறைய உள்ளன. பச்சையாக வெங்காயம் சாப்பிட்டால் 'சி' உயிர்ச்சத்து நிறையக் கிடைக்கும்.

இவ்வெங்காயத்தைப் பற்றிய மருத்துவம், வெங்கா யத்தின் தோல், வெங்காயக்கிழங்கு, வெங்காயத்தின் வித்து அதன் இதழ்களான தாள், தாளின் நுனியில் தோன்றும் வெண்ணிறப்பூ ஆகிய எல்லாமே பல விதங்களில் நமக்கு நோய் நீககும் மருந்துகளாக பயன் படுகிறது.

வெங்காயத்திற்கு தீரும் நோய்களாக பித்தம், தலைவலி, பருநீங்கல், வயிற்றுவலி, நாரி எரிவு, சருமப் படைகள், தேள்கடி, இருமல், காசநோய், விஷக்கடி, காக்கை வலிப்பு, பூச்சிக்கடி மற்றும் எண்ணற்ற நோய்கள் நீக்க உதவுகிறது.

வெங்காயத்தின் மூலம் நோய் தீர்க்கும் செய்முறை யும் பயனும்

## உடலின் அனல் தணிய...

தோல் நீக்கிய வெங்காயத்தை ஒரு கைபிடி அளவில் எடுத்து சுத்தம் பார்த்து இதனுடன் தேவை யான பசு நெய் விட்டு நன்கு வதக்கி சாப்பிட, உட லில் காணும் அனல் தனியும்.

## தேமல் படை நீங்க...

தேவையான வெங்காயத்தை எடுத்துக்கொண்டு, அதனுடன் துளசியையும் சேர்த்து அரைத்து தேமல் உள்ள இடத்திற்கு போட்டால் நாளடைவில் தேமல், படை படிப்படியாக நீங்கும்.

## வயிற்றுக் கோளாறுக்கு...

தோல் நீக்கிய நான்கு வெங்காயத்தை எடுத்து பொடிப்பொடியாக நறுக்கி, தயிருடன் கலந்து காலை யில் சாப்பிட் நாளடைவில் வயிற்றுக் கோளாறுகள் நீங்கி நலம் பெறலாம்.

## உடலில் கொழுப்பு நீங்க...

உடலில் வீண்சதை இருப்பவர்கள் தினமும் வெங் காயத்தைத் தொடர்ந்து சாப்பிட்டுவர, உடல் மெலியும்.

## கட்டிகள் உடைய...

தேவையான சுட்ட வெங்காயத்தை எடுத்து அதனு டன் அரைத்த மஞ்சளும், நெய்யும் ஒன்று சேர்த்துப் பிசைந்து கட்டி உள்ள இடத்தில் வெற்றிலையில் வைத்துக் கட்ட வேண்டும். தொடர்ந்து மூன்று நாட்கள் செய்யும் பட்சத்தில் பழுக்காத கட்டி விரைவில் பழுத்து உடையும்.

## மஞ்சட் காமாலை..

போதிய வெங்காயத்துடன் சீரகத்தைச் சேர்த்து அரைத்துச் சாப்பிட காமாலை படிப்படியாக நீங்கும்.

## காது வலிக்கு...

நான்கு வெங்காயத்தை எடுத்து நசுக்கிச் சாறு எடுத்துக் கொண்டு, இச்சாற்றை சூடாக்கி சில நிமிடம் ஆறிய பிறகு இரண்டு சொட்டு காதில் விட்டதும் காதுவலி நீங்கும்.

## குடல் சுத்தமாக இருக்க...

குடல் சுத்தம் அடைய வேண்டுமாயின் வெங்கா யத்தை அப்படியே பச்சையாக வாயில் போட்டு சாப் பிட்டு வர குடல் சுத்தம் ஏற்படும்.

## வாயு நீங்க...

சுத்தமான தேனை எடுத்து அதில் வெங்காயத்தை போட்டு கலக்கிய பின் சாப்பிட்டு வர வாயு நீங்கும்.

## புகையிலை மயக்கத்திற்கு..

புகையிலையினால் மயக்கம் ஏற்பட்டவர்களுக்கு தோல் நீக்கிய மூன்று வெங்காயம் சாப்பிடக் கொடுத் தால் அம்மயக்கம் உடன் தணியும்

## மலச்சிக்கல் நீங்க...

தேவையான வெங்காயத்தை எடுத்து சிறிது சிறி தாக நறுக்கி, தேங்காய் என்னையில் வதக்கி சாப் பிட்டால் உடன் மலச்சிக்கல் நீங்கி நலம் உண்டாகும்.

## இரத்தக் கடுப்புக்கு...

தேவையான வெங்காயத்தை எடுத்து தேங்காய் எண்ணையில் வதக்கிச் சாப்பிட்டவுடன் சிறிது நேரம் பொறுத்து மோர் சேர்த்து அருந்த நாளடைவில் இரத்தக் கடுப்பு என்ற நோய் நீங்கும்.

## நரம்பு சம்பந்தமான நோய் குணம் அடைய...

தோல் நீக்கிய வெங்காயத்தை பச்சையாகவோ அல லது வதக்கியோ தொடர்ந்து மூன்று நாட்கள் சாப்பிட்டு வர நரம்புகளில் உள்ள நோய் குறையும், அத்துடன் நரம்புகளும் பலம் பெறும். வெங்காயத்தை எடுத்து வதக்கி நாள்தோறும் சாப்பிட நரம்புத் தளர்ச்சி நீங்கும்.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
வருமுன் காப்போம்.
- முதுமொழி.

# நமது நோக்கு

## தடுப்பதற்குத் தயாராவோம்!

யாழ்.குடாநாட்டில், மழை காலத்திற்கேயுரிய தொற்று நோய்களின் பாதிப்பு, அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தலைகாட்ட ஆரம்பித்துள்ளது.

வாந்திபேதியும், நெருப்புக்காய்ச்சலும், வயிற்றோட்டமுமாக - மக்களைப் பாதிக்கச் செய்யும் இந்தத் தொற்றுநோய்கள் - தீவிரம் பெறுமுன்னர், ஏற்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், எதிர்கொள்ளல் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டிய தேவை அவசியமாகவுள்ளது.

தொற்று நோய்கள் பற்றிய எச்சரிக்கைகளையும், ஆலோசனைகளையும் - சுகாதாரப் பிரிவினர் வெளியிட்டு வருகின்றபோதும், மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

மக்கள் தமது சூழலையும், பொது இடங்களையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்வதன் மூலமும் - தம்மைத் தாமே தொற்று நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கேற்ற வழிமுறைகளையும் கைக்கொண்டு வந்தாலுமே மிகப் பெரும் நிர்ப்பீடணத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம்.

மழை காலங்களில் நீர் தேங்கக்கூடிய இடங்களை இனங்கண்டு, அவற்றைச் சீர்படுத்துவதாலும், குடிநீர் பெறும் கிணறுகளுக்கு 'குளோரின்' இடுவதாலும், குப்பை கூழங்களை எரித்தோ, புதைத்தோ-சூழலைச் சுத்தமாக்குவதாலும், வீட்டைச் சுற்றியுள்ள பற்றைகள், தேவையற்ற தாவரங்களை அழித்து விடுவதாலும் - இலகுவான வழிமுறைகள் மூலம் முதற் கட்டப் பாதுகாப்பைத் தேடிக்கொள்ள முடியும்.

அதேவேளை - சுகாதாரமான பழக்கவழக்கங்களைப் பேணிக்கொள்வதன் மூலமும் நோய்த்தடுப்பை வலுப்படுத்த முடியும்.

இவ்வகையில் - கொதித்தாறிய நீரைப் பருகுதல், தொற்று நீக்கிகளைப் பயன்படுத்துதல், திறந்த வெளிகளில் மலசலம் கழிப்பதைத் தவிர்த்தல் என அடிப்படையான சுகாதார முறைகளைப் பின்பற்றுதல் அனைவருக்கும் இலகுவானதே.

இதேவேளை - நோய்த்தொற்று எனச் சந்தேகிக்குமிடத்து, அல்லது நோய்ப்பாதிப்பு என உறுதிப்படுத்தப்படுமிடத்தும் - வீணான தாமதங்களையும், கைமருந்துப் பாவனையையும் தவிர்த்து, தகுந்த மருத்துவ உதவிகளைப் பெற்றுக் கொள்வது இரண்டாம் கட்டப் பாதுகாப்பாகும்.

உடனடியாகவே, வைத்தியரின் ஆலோசனையையும், அறிவுரைகளையும் ஏற்றுச் செயற்படுவதன் மூலமே மற்றவர்களுக்கு நோய் பரவுவதைத் தடுப்பதுடன், வேகமாக நோய்த்தாக்கத்திலிருந்து விடுபடவும் முடியும் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மக்களுக்கான பாதுகாப்பு வழிகள் இவ்வாறிருக்கும் போது - ஏனைய துறையினரும் - தொற்று நோய் பாதுகாப்புக்குத் தகுந்த ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டிய கடப்பாடுடையவர்களாக உள்ளனர்.

பொது இடங்களைச் சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் பேண - அந்தந்தப் பகுதிகளுக்குரிய அரச அதிகாரத் தரப்பினரும், சுகாதாரப் பிரிவினரும் பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும்.

உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் வைத்திருப்போர் - உயர்ந்தபட்ச சுத்தத்தைப் பேணத்தவறின், அவர்கள் சமூகக் குற்றமிழைத்தவர்களாகவே கருதப்படுவர். யாழ்ப்பாணத்திலுள்ள உணவகங்களிலும், சிற்றுண்டிச் சாலைகளிலும் குறிப்பிடத்தக்க வீதமானவை - சுகாதாரமான நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை என்பதே மக்களின் குற்றச்சாட்டாகவும் உள்ளது. இவ்விடயங்களில் சுகாதாரப் பிரிவினர் கூடிய கவனம் செலுத்தவேண்டிய அவசியம் இன்று நிலவுகின்றது.

அதேவேளை - யாழ்.குடாநாட்டிலேயே வைத்திய சாலை வசதிகள் குறைந்த பகுதிகளுக்கான தகுந்த முன்னேற்பாடுகள் இதுவரை செய்யப்பட்டதாகவும் தெரியவில்லை.

மக்கள், நோய் கண்டால் வைத்தியசாலைகளை தாமே நாடிவருவர் என வழக்கமாகக் காத்திருப்பு நிலையிலும்-

மருத்துவ வசதிகள் கிடைக்காத, குறைவாக உள்ள பகுதகளுக்கு காலத்துக்குக்காலம் - மருத்துவப் பரிசோதனைகளையும், கண்காணிப்பையும் வழங்க வைத்திய சாலைகள் முன்வரவேண்டும்.

இந்த வகையில் சமூகத்தின் சகல தரப்புக்களிலிருந்தும் ஒழுங்கான நடைமுறைகள் பின்பற்றப்படுமாயின்- தொற்று நோய்களின் பாதிப்புக்களைப் பெருமளவில் தகர்த்துவிட எம்மால் முடியும் என்பதே நிதர்சனமாகும்.

# ரோக்கியோவில் பேச்சு நடத்த உத்தியோகபூர்வமாக அழைப்பு!

## ரணிலிடம் நேரில் விடுக்கப்பட்டது

(ரோக்கியோ)

ஜப்பானின் தலைநகரான ரோக்கியோவில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை நடத்துமாறு ஜப்பானிய அரசு உத்தியோகபூர்வமாக இலங்கையைக் கேட்டுக்கொண்டுள்ளது.

ரோக்கியோ சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், ஜப்பானிய வெளியுறவுதுறை அமைச்சர் யொறிகோ கவாகுச்சி இந்த அழைப்பை விடுத்தார்.

ஜப்பானிய அரசின் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதனை தாம் வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜப்பானிய பிரதமர் மற்றும் மன்னர் அகிகிட்டோ ஆகியோரையும் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசினார்.



ஜப்பானிய மன்னர் அகிகிட்டோவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும்.

# நாடளாவிய வேலை நிறுத்தங்களுக்கு ஏற்பாடு செய்துவரும் ஜே.வி.பி!

## அரசை ஸ்தம்பிக்கச் செய்ய முயற்சி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மிகப் பெரிய வேலை நிறுத்தங்களை மேற்கொள்வதற்கு ஜே.வி.பி திட்டமிட்டு வருவதாக பொலிஸ் அறிக்கைகள் அரசாங்கத்தை எச்சரித்துள்ளன.

அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் நோக்கில் ஜே.வி.பி வேலை நிறுத்தங்களை மேற்கொள்ளத் திட்டமிடுவதாகவும் இதற்குப் பல்கலைக்கழக மாணவர்கள், அரச ஊழியர்கள் மத்தியில் ஜே.வி.பி பிரசாரங்களை மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸாரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முழுமையான வேலைநிறுத்தம், சட்டப்படி வேலை செய்தல், மெதுவாக வேலைசெய்தல் எனப் பல்வேறு போராட்டங்களை நடத்துவதற்கு ஜே.வி.பி திட்டமிட்டுள்ளதாகவும், இத்தகைய போராட்டங்களின் மூலம் நாட்டின் அரச நிர்வாகத்தை முற்றாக ஸ்தம்பிதமடையச் செய்து, அரசியல் குழப்பநிலையை தோற்றுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ள எச்சரிக்கைக் குறிப்பில் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## கரும்புலிகளின் அணியை கலைக்கக் கோருகிறார் மகிந்த

(கொழும்பு)

புலிகள் தம்மிடமுள்ள தற்கொலைப் படையணியைக் கலைத்து விட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

தற்போது சமாதான முயற்சிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில் புலிகள் தமது தற்கொலைப் படையணியான கரும்புலிகள் அணியைக் கலைத்து விட வேண்டும்.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பலவும் இதையே வலியுறுத்துகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸ மேலும் தெரிவித்தார்.

## பேச்சு குறித்த செய்திகளை திரிபுபடுத்தும் ஊடகங்கள்

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் நேற்று நடைபெற்ற முடிந்த 3ஆவது சுற்றுப் பேசசுக்கள் தொடர்பாக சில தொடர்பு ஊடகங்கள் செய்திகளை திரித்து வெளியிடுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பேச்சுக்கள் தொடர்பான செய்திகளைச் சில ஊடகங்கள்-குறிப்பாக, சில சிங்கள ஊடகங்கள் தமக்கேற்றபடி செய்திகளை திரிபுபடுத்துவதாகவும், சில விடயங்களைப் பெரிதுபடுத்துவதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# வாகனம் மீளப் பெறப்பட்டதால் குடாநாட்டு தபால் சேவை பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தபால் பொதிகளை எடுத்து வந்த வாகனம் தபால் திணைக்களத்தினால் மீளக் கையேற்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக சிறிய வாகனம் ஒன்றே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தபால் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

யாழ்.குடாநாட்டுக்கு தபால் பொதிகளை எடுத்து வருவதற்கு தற்போது வழங்கப்பட்டுள்ள சிறிய வாகனத்தில் இட வசதி இல்லாமையினால், குடாநாட்டுக்கான தபால் சேவைகள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டி வீதி போக்குவரத்திற்காகத் திறக்கப்பட்டதை அடுத்து, நீண்டகாலமாக சீரழிந்திருந்த குடாநாட்டுக்கான தபால் சேவையை ஒழுங்கமைக்கும் நோக்குடன், ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரினால், வாகனம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. இவ்வாகனம் மூலம், குடாநாட்டில் சேகரிக்கப்படும் தபால் பொதிகள் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன.

குடாநாட்டுத் தபால் பொதிகளும் வவுனியா தபாலகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வந்தன.

கடந்த மாத இறுதியில் சேவையில் ஈடுபட்டிருந்த இவ்வாகனத்தை வவுனியா தபால் திணைக்களம் மீளப் பெற்றுக் கொண்டு சிறிய வாகனம் ஒன்றினை வழங்கியுள்ளது. இவ்வாகனத்திலேயே குடாநாட்டுக்கான தபால் பொதிகள் எடுத்துவரப்படுகின்றன.

வாகனத்தில் இட வசதி இன்மையால் ஒவ்வொரு தடவையும் சுமார் 50 தபால் பொதிகளுக்கு மேல் வவுனியாவில் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குடாநாட்டிலுள்ள அரச திணைக்களங்களுக்கும், நேர்முகப் பரீட்சை, நியமனக் கடிதங்கள், உள்ளூர் வெளியூருக்கான கடிதங்கள் கிடைப்பதில் காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ச)

# நவீன ஒளிபரப்புச் சாதனங்களைப் புலிகள் கொழும்புத்துறைமுகம் ஊடாகப் பெற்றுள்ளனர்!

## தென்னிந்தியாவிலும் பிரசாரத்துக்குப் பயன்படும் என்கிறார் அனுரா

(புதுடெல்கி)

நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் புலிகள் நவீன தொடர்புச் சாதனங்களை - தென்னிந்தியாவில் பிரசாரங்களை தொலைக்காட்சி மூலம் மேற்கொள்வதற்காகக் கொள்வனவு செய்திருப்பதாக பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

புதுடெல்கியில் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயைச் சந்திக்கச் சென்றிருந்தபோதே செய்தி ஊடகம் ஒன்றுக்கு அவர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

உண்மைகளைத் திரிபுபடுத்தி நாட்டின் வட-கிழக்குப் பகுதிகளிலும் தென்னிந்தியாவிலும் பிரசாரங்களை மேற்கொள்ளவே புலிகள், இந்த அதிநவீன தொடர்பு சாதனங்களைக் கொள்வனவு செய்திருக்கின்றனர். இதற்கு நோர்வே உதவி வழங்கியிருப்பதாக எமக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது.

இந்த நவீன சாதனம் கொழும்புத் துறைமுகம் ஊடாக எடுத்து வரப்பட்டதாகவும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஓமந்தை வழியாகத் தரைமார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அனுரா பண்டார நாயக்க மேலும் தெரிவித்துள்ளார் என அவ்வூடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

# பேச்சும் செயலும் ஒன்றிக்காது விட்டால் பேச்சு நிலைக்காது என்பது அபிப்பிராயம்!

*ஈழத்திலும், இந்தியா, சிங்கப்பூர், லண்டன், கனடா, அவுஸ்ரேலியா, சுவிஸ் போன்ற மேலை நாடுகளிலும் ஆன்மீக உரைகளால் மக்களைக் கவர்ந்து வருபவரும், உலக இந்து மகாநாடுகள்,தமிழ் ஆய்வுக் கருத்தரங்குகள் பலவற்றில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து வருபவரும், சிறந்த ஆசிரியப் பணியால் கல்வித் திணைக்களத்தின் நல்லாசிரியர் விருதினைப் பெற்றவருமான, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் 'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுருகன் வழங்கிய செவ்வியிலிருந்து....*

*கேள்வி:-* தாங்கள் ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவதிலும், சமூகப் பணிகளை முன்னெடுப்பதிலும் சிறப்புற்று இருப்பதற்கு யார் வழிகாட்டினார்கள்?

*பதில்:-* எனது பெற்றோர்கள், என்னை உருவாக்கிய எனது ஆசிரியர்கள், சீரிய வழிகாட்டியாக விளங்கும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். என்னை உற்சாகப்படுத்திய அன்பர்கள், வழிகாட்டிகளாக யான் கருதுகிறேன்.

*கேள்வி:-* பேச்சுத் துறையில் தங்கள் ஆரம்பகால அனுபவம் பற்றி.....?


*பதில்:-* ஆரம்பக் கல்வியை இராமநாதன் கல்லூரியிலும் பின் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும், பின்னர் மேல் நிலைக் கல்வியை யாழ்.இந்துக் கல்லூரியிலும் கற்றேன். எனது முதல் மேடை அனுபவம் இரண்டாம் வகுப்புப் படிக்கும்போது இராமநாதன் கல்லூரி அரங்கில் எனது ஆசிரியை திருமதி அமிர்தவல்லி சின்னையா அவர்கள் சுந்தரமூர்த்தி நாயனார் பற்றி உரையாற்ற மேடை ஏற்றினார்கள். அன்று என்னை மேடை ஏற்ற அவர்கள் பெரும் பாடுபட்டார்கள். மேடையில் நின்று அவர் நின்ற திசையைப் பார்த்தவண்ணமே யான் உரையாற்றினேன். அன்று கிடைத்த பாராட்டு என்னை அரங்கத்தில் ஏறும் பயத்தை நீக்கியது. என்னை இத்துறையில் சிறுவயதிலிலேயே நெறிப்படுத்திய ஆசிரியரை மறக்க இயலாது. அவர்கள் இட்ட அத்திவாரம் எனது வளர்ச்சிக்கு வித்திட்டது. பின் யாழ்.இந்துக் கல்லூரியில் என்னை இத்துறையில் வளர்ச்சி பெற வழிகாட்டியவர் காலஞ்சென்ற ஆசிரியர், புகழ்பூத்த எழுத்தாளர், பேச்சாளர் இ.மகாதேவா (தேவன் - யாழ்ப்பாணம்) அவர்கள். இந்துக் கல்லூரியில் எனது தமிழ் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டிய ஆசிரியத் தெய்வங்கள் மூதறிஞர் க.சிவராமலிங்கம், வித்துவான் சொக்கன், தம்பையா ஆசிரியர், வித்துவான் ஆறுமுகம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் உரை




யாற்றுவித்து எதிர்காலத்தில் இவர் சிறந்த பேச்சாளராக விளங்குவார் என்ற நல்லாசி வழங்கி ஊக்குவித்தவர் எனது மதிப்பார்ந்த அதிபர் பி.எஸ்.குமாரசுவாமி அவர்கள். இவர்கள்தான் என்னை ஆரம்பகால பேச்சுத்துறைக்கு வழிகாட்டியவர்கள். குறிப்பாக தேவன் ஆசிரியர் அவர்கள் சகல பேச்சுப் போட்டிகளுக்கும் தானே விண்ணப்பித்து விடயத்தை எழுதித்தந்து பேசிக் காட்டுவார். உயர் வகுப்பு கற்கும் போது, தான் செல்லும் தமிழ் விழாக்களுக்கு என்னைப் போன்ற மாணவரையும் அழைத்துச் செல்வார்.

*கேள்வி:-* ஆலயங்களில் ஆன்மீகச் சிறப்பு விரிவுரைகள், தொடர் சொற்பொழிவுகள் எனக் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிவருகிறீர்கள். ஆலயங்களில் பேசும் ஆர்வம் அல்லது வாய்ப்பு எப்படி ஏற்பட்டது?

*பதில்:-* எனது சொந்தவூர் இணுவில் - எங்களூர் கோயில்களில் பல வருடங்களுக்கு முன்பே தெய்வீகச் சொற்பொழிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். சிறுவனாக இருக்கும்போதே அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் தொடர் விரிவுரைகளைக் கேட்கும் வாய்ப்பு பரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் கிடைத்தது. மணிபாகவதர் போன்ற அறிஞர்களின் உரை என்னைக் கவர்ந்தது. இவறறால் ஈர்க்கப்பட்ட யான் கோயில பேச்சை ஆரம்பித்தது எதிர்பாராதவிதமாகவே. ஏழாலை களவாவோடை அம்மன் கோயிலுக்கு ஒரு நாள் வழிபாடு செய்யச் சென்றபோது அங்கு பேச ஒழுங்குபடுத்தியவர் வரவில்லை என்று விழா உபயகாரர் அந்தரப்பட்டார். அந்த இடத்தைச் சமாளிப்பதற்கு 5 நிமிடம் பேசுவோம் என்று பேச முற்பட்டேன். அன்று அவ்வுரையை கேட்டவர்கள் சுன்னாகம் வாரியப்புலம் அம்மன் கோயிலில் தொடர் விரிவுரையாற்றும்படி வேண்டினார்கள். அத்தொடர் விரிவுரை எனக்கு பயிற்சிக் களமாகியது. தொடர்ந்தேன். உள்ளூர் ஆலயங்களில் அழைத்தார்கள். கம்பவாரிதி ஜெயராஜ் யாழ்.இந்துக் கல்லூரியில் யான் மத்திய பிரிவில் பேச்சுப் போட்டியில் பேசும்போது, அவர் மேற்பிரிவில் பேசினார். அன்று முதல் ஒரே குடும்



ஆறு.திருமுருகன்.

பத்தின் உறுப்பினர்களாக வளர்ந்தோம். 1990 களில் என் பேச்சை ரசித்த கம்பவாருதி என்னைக் கம்பன் கழகத்தில் அரவணைத்து நூற்றுக்கணக்கான பட்டிமன்றங்களிலும், விவாத அரங்குகளிலும், சுழலும் சொற்போர்களிலும் என்னை வெளியுலகிற்கு அறிவித்தார்.

*கேள்வி:-* சமயச் சொற்பொழிவையும், சமூகத் தொண்டையும் இணைத்துச் செயற்படுபவர்கள் ஒரு சிலர். அவர்களில் ஒருவராக நீங்கள் இன்று விளங்குகின்றீர்கள். இதைப் பற்றித் தங்கள் கருத்து?

*பதில்:* பேச்சும் செயலும் ஒன்றாக அமையாவிட்டால் பேச்சு நிலைக்காது என்பது எனது அபிப்பிராயம். ஆன்மீகப் பேச்சு என்பது எம்மை நாம் அறிந்து கொள்ள வாய்ப்புத் தருவது. இவ்வகையில் யான் பேசத் தொடங்கிய காலத்தில் மானசீகமாக மதித்த அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் செயற்பாடுகள் எனக்குள் என்னை வழிகாட்டின. எனவே, பேச்சைப் பயன்படுத்தி இயன்ற பணிகளைச் செய்ய அன்னையின் அரவணைப்பு உதவியது. அம்மா - பேச்சுத் துறையில் ஈடுபட்ட நாள் முதல் அறிவுரைகள் கூறியதோடு கடந்த எட்டு ஆண்டுகளாக தனது நிர்வாகப் பணிகளில் என்னை இணைத்து, துர்க்காதேவி தேவஸ்தானத்தின் சமூகப்பணிகளில் பங்குகொள்ள வைத்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வனுபவமே இன்று சமூகத்துக்குப் பயனான காரியங்கள் செய்ய வழிகாட்டியது எனலாம்.

*கேள்வி:-* கடந்த சில ஆண்டுகளாக மேலை நாடுகளுக்குச் சென்று ஆன்மீகப் பணிகள் ஆற்றி வரும் தாங்கள், அங்கு எம் பண்பாட்டு அம்சங்கள் நிலை பற்றிக் கூற முடியுமா?

*பதில்:-* தங்களின் இந்த வினா பற்றி விளக்குவதானால் விரிவான விளக்கம் வேண்டும். சுருக்கமாகக் கூறுவதாயின், இங்கிருந்து சென்ற எம்மவர் தம் பாராம்பரிய பண்பாட்டைக் காப்பதற்கு பல வழிகளிலும் அயராது பாடுபடுகிறார்கள். எனினும், அங்கு பிறந்த எமது சந்ததி இவற்றைத் தொடர்ந்து பேணுமா என்பது கேள்விக்குரியது. காரணம் அவர்களின் சூழ்நிலை அவர்களுக்கு முதல் வழிகாட்டி.


*கேள்வி:-* தங்களின் ஆன்மீகப் பயணத்தால் யாழ். போதனா வைத்தியசாலையில் பலருக்கும் பயன் தரும் நவீன கண் சத்திரசிகிச்சைக் கூடம் கட்டப்பட்டது. இவ் எண்ணம் எவ்வாறு தங்களுக்கு ஏற்பட்டது?

*பதில்:-* கண் மனிதனின் வாழ்வுக்கு வழிகாட்டும் பிரதான உறுப்பு. எவ்வித வசதிகளுமின்றி அரிய பணியாற்றி வரும் ஒரேயொரு கண் வைத்திய நிபுணர் குகதாசன் அவர்களிடம் ஒரு சமயம் நோயாளியாக வைத்தியசாலையில் வாட்டில் இருந்த போது - அளவளாவியதன் பொருட்டு, என் அகத்தில், கண் சிகிச்சைக்கு என்றைக்கோ உதவ வேண்டும் என எண்ணினேன். இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை என் ஆவலைப் பூர்த்தி செய்தது.

நேர்காணல்:-எஸ்.சாந்தன்.

## மாசகன்ற மனதிலே இறைவன் குடியிருந்து மானுடத்தையும் அவனே இயக்குகின்றான்!

ஒருவருடைய வாழ்வு அவருடைய மனத்தின் நினைவு நலத்திற்குத் தக்கவாறுதான் அமையும். மனம



ஆன்மீக அரங்கம்

ஒரு கத்தி போன்றது. கத்தி மாம்பழம் நறுககவும் உதவும், பிறருடைய அழிவை நாடவும் உதவும். அது போல மனம் நன்மை நினைக்கவும் ஆகும். தீமை நினைக்கவும் ஆகும். நலம், தீங்கு இரண்டுக்கும் நமது மனமே பரம காரணம்.

மனதில் நெடுங்காலமாக மாசு ஏறியுள்ளது. அந்த மாசினை நாம் அகற்ற வேண்டும் என்று முயல்வதில்லை. "ஏன் மனதில் மாசு படிந்துள்ளது?" என்ற எண்ணமேயில்லை. பாத்திரங்களை அன்றாடம் விளக்கின்றோம், பல் விளக்குகின்றோம், அன்றாடம் ஆடைகளைத் தோய்க்கின்றோம், கண்ணாடி முதலியவற்றைத் தினம் துடைக்கின்றோம் நமது மனதை மட்டுந்துடைப்பதில்லை. பெரிய அறம் எது என்றால் மனத்தின் மாசினையகற்றுதலாம்.

*"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்; ஆகுல நீர பிற" என்கிறது - திருக்குறள்.*

மனத்திலே தூய்மையில்லாதவர் புரியும் மாதவம் நன்கு பயன் தராது. மாசுடைய மனத்தினர் நினைத்த கருமங்கள் ஒன்றுங் கைகூடா, மாசிலா மனத்தினர் நினைத்த கருமங்கள் அனைத்தும் தெய்வத் திருவருளால் இனிது கைகூடும். கன்மனங் கரைந்து நன்மனம் பெற்றோர் மனத்தை இறைவன கோயிலாகக் கொண்டு வீற்றிருப்பான்.

"நினைப்பவர் மனங் கோயிலாகக் கொண்டவன்" என அப்பர் அழகாகக் கூறுவார். "மருவு மடியார்கள் மனதில் விளையாடு மரகத மயூரப் பெருமாள் காண்" என அருணகிரி நாதர் உரைப்பார்.

மனத்திலே கோணலும் சில வேளை அமைந்துவிடுகின்றது. கோணல் மனம் படைத்தவர்கள் பலர். கோடிய மனத்தால் தேடிய பாவங்கள் எண்ணிறந்தன. கோணல் மனம் படைத்தவர்கள் நல்லவர்களையும் அந்தக் கோணல் மனத்தாலே கண்டு அவர்கள் மீது பழி பாவங்களைச் சுமத்திப் பேசுவார்கள்.

தூயவர்களைத் தீயவர்களாகவே பார்ப்பார்கள். கோணல் மனம் உள்ளவர்கள் நேர்வழியில் நடக்க மாட்டார்கள். கோணல் வழியில் தான் நடப்பார்கள். அவர்கள் நினைவிலே கோணல், பேச்சிலே கோணல், செயலிலே கோணல், இப்படி எல்லாமே கோணலாக அமைந்திருக்கும். இவ்வளவுக்கும் மூல காரணம் மனத்தில் கோணல் இருப்பதுவேயாகும். ஆகவே அறிஞர்கள் கோணல் உள்ள மனமான இரும்பை ஞானத் தீயில் காய்ச்சி, தம் நீதி நூலாகிய சம்மட்டியினால் அடித்து நிமிர்த்த வேண்டும்.

நாம் நமது மனத்தால் பிறரை நன்கு மதித்து அன்பு செய்தால் அவர்களும் நம்மை மதித்து அன்பு செய்வார்கள். நாம் அவர்களை மதியாதிருப்பின், அவர்களும் நம்மை மதியாது புறக்கணிப்பர்.

ஒரு குளத்தின் நடுவில் ஒரு கல்லை எறிந்தால் நாலு பக்கங்களிலும் அலை புறப்பட்டு ஒரு அலை மற்றொரு அலையை உண்டாக்கி, அந்த அலை வேறொரு அலையை உண்டாக்கி முடிவில் கரையில் பேரலையாக மோதி, மறுபடியும் அந்த அலை சிறிது சிறிதாகத் தேய்ந்து புறப்பட்ட இடத்திலே சென்று முடிவு பெறுகின்றது. அதுபோல் நாம் எல்லோரும் வாழ வேண்டும் என்று தூய நினைவு நினைத்தால், அந்த நல்ல நினைவு அலை பிறரிடம் சென்று அவர்களிடமிருந்து மீண்டும் நம்மிடம் வந்து ஒடுங்குகின்றது.

அவன் கெடவேண்டும், இவன் கெடவேண்டும் என்று எண்ணுகிற தீய நினைவு அலைகள் சென்று மீளவும் நம்பால் வந்து நம்மைத் தாக்குகின்றன. ஆகவே தூய நினைவால் நாம் வாழ்வோம், தீய நினைவால் நாம் வீழ்வோம். இந்த இரகசியம் பலருக்குத் தெரிவதில்லை. ஆகவே மனம்போல வாழ்வு அமைகின்றது.

நல்ல மனம் படைத்தவர்க்கு நல்வாழ்வும், தீய மனம் படைத்தவர்க்கு அல்வாழ்வும் உண்டாகும்.

எனவே, நற்செயல் புரிந்து நல்வினை வளர்ப்போமாக.

*- மதுரகவி.*

## 11 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வலி. மேற்கில் அமைக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பகுதியின் பல இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை மேற்படி பகுதிக்கான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்கொண்டு வருகின்றது.

அராலி கிழக்கு, அராலி வடக்கு, அராலி மேற்கு, கட்டுப்புலம், சுழிபுரம், வட்டுக்கோட்டை தெற்கு, வட்டுக்கோட்டை மேற்கு, சங்கானை தெற்கு, சங்கானை கிழக்கு, சங்கரத்தை, சத்தியக்காடு ஆகிய பகுதிகளிலேயே புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்காக, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் பொருத்தமான காணிகள் தெரிவு செய்யப்படவுள்ளது. காணி தெரிவு செய்யப்பட்டதும் புதிய கட்டடங்கள் அமைக்கப்படும். (க)

## மண்கும்பானில் நால்வருக்கு 15 ஆயிரம் ரூபா நிதியுதவி

(மண்கும்பான்)

மண்கும்பானில் மீளக்குடியமர்ந்தவர்களுள் முதற்கட்டமாக 4 குடும்பங்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வதம் வழங்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் இந்நிதி வழங்கப்பட்டது.

ஏனையோருக்கும் இந்நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி தங்களுக்கான குடிசைகளை அமைக்கத் தொடங்கியுள்ளனர். (53)

## வீதிப் புனரமைப்பில் உலக உணவு ஸ்தாபனம்

(பளை)


கிளிநொச்சிப் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக உலக உணவு ஸ்தாபனத்தினால் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திற்குட்பட்ட புலோப்பளை கிழக்கு அந்தோனியார் வீதி, கோவில் வீதி, மாசார்-முகாவில் வீதி ஆகிய வீதிகள் புனரமைக்கப்படுகின்றன.

இவ்வீதிப் புனரமைப்பில் பங்குபற்றும் மக்களுக்கு உலக உணவு ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் 15 நாட்களுக்கு ஒரு தடவை பகிரப்படவுள்ளதாக பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (115)

## ஈ.பி.டி.பிக்கு எதிரான நேற்றைய ஆர்ப்பாட்டங்களிலிருந்து...

### மல்லாகத்தில்..







### சுன்னாகத்தில் .







### மானிப்பாயில்..





# அதிர்ஷ்ட வாரம்

## 06.12.2002 தொடக்கம் 12.12.2002

### மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

இந்தராசியில் பிறந்தவர்கட்டு இவ்வாரம் பிதா உள்ளம் குளிர்ச்சி, தெய்வதரிசனம், சமயநூல் பாராயணம், தெய்வசேவை, சமூக சேவையில் மதிப்பு , சுப காரியங்களில பங்கு, பெண்கள் மகிழ்ச்சி, மதகுருமார் ஆசீர்வாதம் ஆகிய நற்பலன்களுடன் வார இறுதியில் கர்வநிலை, வாக்குவாதம், வீண் செலவு, உடனலக்குறைவு போன்ற தீயபலன்களும் இடம்பெறலாம். பிதா தேகசுகம் நன்று, மாதா தேகசுகம் நன்று, கணவன் மனைவி தேகசுகம் நன்று, புத்திரர் தேகசுகம் நன்று, திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில ஸ்தானத்தில் கஷ்டமின்றி கடமை புரியமுடியும்.

### இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில் தேகசுகக் குறைவு, புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் இருப்பது நன்று, ஞாயிற்றுக் கிழமையின் மேல் பிதாவுடன் நல்லுறவு, தெய்வதரிசனம், சமயநூல் பாராயணம், தெய்வசேவை, மதகுருமார் ஆசீர்வாதம், சமூகசேவை, சுப காரியங்களில் பங்கு, மங்கையா உளப்பூரிப்பு, வெளியூர் பயணம ஆகிய பலன்களுடன் பிதாவின் உடனலம் சமம், மாதாவின் உடனலம் நன்று, கணவன் மனைவி உடனலம நன்று, புத்திரர் உடனலம் நன்று, திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் கஷ்டமின்றி தொழில் புரிய முடியும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 2,3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் மனோரம்மிய வாரமாகக் கழிக்கலாம், தெய்வவழிபாடு, சமய நூல் பாராயணம், மதகுருமார் ஆசீர்வாதம், சுற்றுலா மகிழ்ச்சி, ஆடை அலங்காரம், பிதா மகிழ்ச்சி, சமூக சேவையில் மதிப்பு, சுபகாரியங்களில் பங்கு ஆகிய நற்பலன்களுடன் ஞாயிறு, திங்களில் மட்டும் புதிய காரியங்களில் ஈடுபடுவது நன்றல்ல. பிதாவின் உடனலம் சமம், மாதாவின் உடனலம் நன்று, கணவன் மனைவி உடனலம் நன்று, புத்திரர் உடனலம் நன்று, திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### கர்க்கடகம்

**புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவு, கடன்வசதி, எடுத்த காரியம் வெற்றி, நோய் நீக்கம், சுபகாரியங்களில் பங்கு, பெண்கள மகிழ்ச்சி, சுற்றுலாக் களிப்பு, நவநாகாக ஆடை மகிழ்வு, பிதா மகிழ்சசி, தெய்வவழிபாடு, சமய நூல் பாராயணம் ஆகிய நற்பலன்களுடன் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினஙகளில் புதிய காரியங்களில் ஈடுபடுவது நன்றல்ல. பிதாவின் உடனலம் நன்று, மாதாவின் உடனலம் நன்று, கணவன் மனைவி உடனலம் சமம், புத்திரர் உடனலக்குறைவு, திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், செய தொழில் முன்னேற்றம், தொழல் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் சமம்.

### சிங்கம்

**மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தெய்வவழிபாடு, சமய நூல் பாராயணம், தெய்வ சேவை, மதகுருமார் ஆசீர்வாதம், பணவரவு, பழைய கடன் வசூல், எடுத்த காரியம் வெற்றி, சுபகாரியங்களில் பங்கு, நண்பர்கள, விருந்தினர் வருகை, உடல்குளிர்ந்த உணவு, உளம் குளிர்ந்த உடை அலங்காரம், மரியாதை, கௌரவம் ஆகிய நற்பலன்களுடன் வியாழக்கிழமை மட்டும் புதிய காரியங்களில் ஈடுபடுவது நன்றல்ல. பிதாவின் உடனலம் நன்று, மாதாவின் உடனலம் மத்திமநிலை, கணவன் மனைவி உடனலம் மத்திமநிலை, புத்திரர் உடனலக்குறைவு, திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

### கன்னி

**உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில் வீட்டில் பெண்கள் சுகயீனம், வைத்தியச் செலவுகளும் இடம்பெறலாம், ஞாயிறுக்கிழமையின் மேல் புத்திரர் மகிழ்ச்சி, பொதுசேவையில் புகழ், வரவேண்டிய பணம் வரும், தெய்வ வழிபாடு, தெய்வ சேவையில் ஈடுபாடு, மதகுருமார் ஆசி, விருந்தினர், நண்பர் உறவு, எடுத்த காரியம வெற்றி, பிதா உடனலம் நன்று, மாதா உடனலம் சமம், கணவன் மனைவி உடனலம் நன்று, புத்திரர் உடனலம் நன்று, திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### துலாம்

**சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் மனோதைரியம், ஊக்கம், காரியசித்தி, புத்திரர் மகிழ்ச்சி, தெய்வசேவை, மதகுருமார் ஆசீர்வாதம், பணவரவு, நோய் குணமடையும், ஞாயிறு,திங்களில் வீட்டில் செலவு, வாகனச்செலவு, கொடுக்கல் வாங்கல் சிக்கல் ஆகியன இடம்பெறலாம், பிதா உடனலம் நன்று, மாதா உடனலம் சமம், கணவன் மனைவி உடனலம் நன்று, புத்திரர் உடனலம் சமம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்விசமம், வியாபார முன்னேற்றம்.

### விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம், கேட்டை**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் நன்மையும் தீமையும் சம அளவிற்கு கலந்திருக்கின்றன. பணவரவு குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, மனச்சஞ்சலம், பெண்களால் வாக்குவாதம், அயலவர்களுடன் சிறிய மனஸ்தாபம், எடுத்தகாரியம் வெற்றி, சுபகாரியங்களில் பங்கு, நண்பர்கள், உறவினர் மகிழ்ச்சி, அறுசுவையுண்டி, வீட்டில் சுகயீனம், வைத்தியச் செலவு, வாகனச் செலவு, வீண் அலைச்சல் ஆகிய பலனகளுடன் பிதா உடனலம் சமம், மாதா உடனலம் சமம், கணவன் மனைவி உடனலம் சமம், புத்திரர் உடனலம் சமம், திருமணப்பேச்சு முன்னேற்றம், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் கஷ்டமில்லாமல் தொழில் புரிய முடியும். மாணவர் கல்விநிலை சமம், வியாபார முன்னேற்றம்,

### தனு

**மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் நன்மையும் தீமையும் கலந்த வாரமாகக் காணப்படும், நண்பர்கள், உறவினருடன் நல்லுறவு, ஆனந்தக்களிப்பு, தெய்வவழிபாடு, சமயநூல் பாராயணம், வரவுக்கு மிஞ்சிய செலவு, வீட்டில் விவாத அரங்கு இதனால் கவலை, அயலவர்களுடன் மௌனம் சாதிக்கவும். வாகனச்செலவு, வீட்டில் திடீர்ச் செலவு, மன உற்சாகம், காரிய சித்தி ஆகிய பலன்களுடன் பிதாவின் தேகநிலை, மாதா தேகநிலை நன்று, கணவன் மனைவி தேகநிலை சமம், புத்திரர் தேகசுகம் நன்று, திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சிறப்பாகத் தொழில் புரியமுடியும், கல்வி சமநிலை, வியாபார முன்னேற்றம்.

### மகரம்

**உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் நன்மையும் தீமையும் கலந்த வாரமாகக் காணப்படும். கர்வநிலை, வீண்செலவு, மனச்சஞ்சலம், வாக்குவாதம், அயலவர்களுடன் மௌனம் சாதிக்கவும், வீட்டில் விருந்தினர் வருகை, அறுசுவையுண்டி, ஆடை ஆபரண பலன், தெய்வவழிபாடு, சமயநூல் பாராயணம், தெய்வசேவை, மதகுருமார் ஆசீர்வாதம் ஆகிய பலன்களுடன் பிதா நற்சுகம், மாதா நற்சுகம், கணவன் மனைவி தேகசுகம் சமம், புத்திரர் மகிழ்ச்சி, திருமணப் பேச்சு தாமதமடையும், தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

### கும்பம்

**அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் நன்மையும் தீமையும் கலந்த வாரமாகக் காணப்படும். தெய்வதரிசனம், சமயநூல் பாராயணம், மதகுருமார் ஆசீர்வாதம், நண்பர்கள், உறவினர் சங்கமம், அறுசுவையுண்டி, கர்வநிலை, வாக்குவாதம், வீண் மனஸ்தாபம், மனச்சஞ்சலம் ஆகிய பலன்களுடன் பிதாவின் உடனலம் நன்று, மாதாவின் உடல் நிலை நன்று, கணவன் மனைவி உடல்நிலை சமம், புத்திரர் சுகம் நன்று, திருமணப் பேச்சு தாமதமடையும், செய்தொழில் மத்திமம், தொழில் ஸ்தானத்தில் சமநிலை, மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### மீனம்

**பூரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி**

இந்தராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தெய்வவழிபாடு, தெய்வ சேவை, மதகுருமார் ஆசி, மன மகிழச்சி, சுற்றுலாச் சிந்தனை, பெணகளால் மகிழ்ச்சி, அறுசுவையுண்டி, ஆடை அலங்கார மகிழ்ச்சி, கர்வ சிந்தனை, வாக்குவாதம் ஆகிய பலன்களுடன் பிதா தேகசுகம் சமம், மாதா தேகசுகம் நன்று, கணவன் மனைவி தேகசுகம் நன்று, புத்திரர் சுகம் சமம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், செய் தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

யாழ். கொக்குவில்
இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின்
புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் - thangan 672002 @ yahoo.com
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்
Better place for your Children

(சி-186)


# சமஷ்டிக் கட்டமைப்....

சமஷ்டிக் கட்டமைப்புப் பற்றி ஆராய்வுகளை ஆரம்பிக்க இரண்டு தரப்பும் இணங்கிக் கொண்டன.

இத் தீர்வு அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளப் படக் கூடியதாக, கீழ்வரும் விடயங்களையும் ஆராய்வதாக, ஆனால் வரையறை அற்றதாக - கலந்துரையாடல்களை அமைத்துக் கொள்ளவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

★ மத்திய மற்றும் பிராந்தியத் திற்கிடையிலான, மத்திக்குள்ளான அதிகாரப் பரவலாக்கம்.

★ புவியியல் பிராந்தியம்

★ மனித உரிமைகள் பாதுகாப்பு

★ அரசியல் மற்றும் நிர்வாகப் பொறிமுறை

★ பொது நிதி

★ சட்டம் ஒழுங்கு

ஆகிய விடயங்களூடாக இந்தக கலந்துரையாடல்கள் நடைபெறும்.

இந்த அரசியல் விவகார ஆராய்வின் முன்னேற்றமானது - யுத்த நிறுத்த உடன்பாட்டின் உறுதிப்பாட்டினை ஆதாரமாகக் கொண்டதெனவும் இரு தரப்பும் ஒத்துக் கொண்டன.

இதைவிட வேறு பல உறுதியான விடயங்களினூடாக சுமுக நிலையை ஏற்படுத்தவும் இணக்கம் எட்டப்பட்டது.

அவையாவன:-

★ யாழ்ப்பாணத்திலுள்ள விடுதிகளிலிருந்து இராணுவம் விரைவில் விலகிக்கொள்ளுதல்.

★ போர் நிறுத்தக் கண்காணிப்புக குழுவின் மேற்பார்வையூடாகவே புலிகளின் பிராந்தியத் தளபதிகளின் போக்குவரவை உறுதி செய்தல்.

★ யாழ்.குடாநாட்டிலும், தீவுப் பகுதிகளிலும் - ஆயுதங்களற்ற, யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு அமைவாக- அரசியற்கட்சிகளின், அரசியல் வேலைகளுக்கான உரிமையை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளுதல்.

★ நெடுந்தீவில் எழுந்துள்ள பிரசசினை பற்றி, அரசாங்கம் தொடர்புபட்ட கட்சிகள் மற்றும் குழுக்களுடன் கலந்தாலோசித்து தீர்வொன்றை எட்டுதல்.

★ வட-கிழக்கிலுள்ள, சகலமதத தவர்களினதும் வணக்கத்தலங்களை புனரமைத்தல் ஆகிய விடயங்களில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

இத்தோடு - தனியார் சொத்துக்களின் மீதான பாவனைகளைத் தடுத்தல் என்ற விடயமும் கவனத்திற் கொள்ளப்பட்டது. இது பற்றி பாதுகாப்பு உபகுழு ஆராயவும் உடன்பாடு எட்டப்பட்டது.

அமைதி முயற்சிகளில் பெண்களின் பங்கினை அதிகரிப்பதற்காக- இரண்டு தரப்பிலிருந்தும் நான்கு பேர் கொண்ட பிரதிநிதிகள் குழுவை அமைத்து - அதனூடாக ஆலோசனைகளைப் பெறுவதற்கும் -

போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு, அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கவும் ஒத்த கருத்துநிலை உருவானது.

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலனுக்காக - யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் விடுதலைப் புலிகள் செயற்பாட்டுத் திட்டமொன்றையும் முன்னெடுக்கவும், இதற்கு சர்வதேசத்தின் நிதியுதவியைப் பெறவும் ஒஸ்லோ சந்திப்பில் முடிவானது.

# ஈ.பி.டி.பி....

நடைபெற்ற ஒவ்வொரு பகுதியிலும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியும், கற்களால் வீசியும், தடைகள் போட்டு வீதிகளை மறித்தும், ரயர்கள் போட்டு எரித்தும், போக்குவரத்துக்களை நிறுத்தியும்- ஈ.பி.டி. பியினருக்கான எதிர்ப்பை வெளிக் காட்டினர்.

எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது சில இடங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து கண்மூடித்தனமான தாக்குதல்களை நடாத்தினர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது குண்டாந்தடிப் பிரயோகம் செய்தும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் பொது மக்கள் மீது தாக்குதல் நடாத்தியும் ஆர்ப்பாட்டததைத் தடுக்க முயற்சி செய்தனர்.

இச்சம்பவங்களின் போது, பொது மக்கள் பலர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த பொது மக்கள் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவற்றை விட மானிப்பாயில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் பயன்படுத்திய முச்சக்கர வண்டியொன்றை படையினர் அடித்து நொருக்கியுள்ளனர்.

(113,68,40,42,60,89,82,100,78,87,111)


முதுகலைமாணிப் பட்டப்பின் படிப்பு (M.A)
காமராஜர் பல்கலைக்கழகம்
மதுரை

மேற்குறிப்பிட்ட பட்டப்பின் படிப்பு தொடர்பான விசேட கருத்தரங்கு எதிர்வரும் 07-12-2002 சனிக்கிழமை பி.ப.1.00 மணிக்கு புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கை காமராஜர் பல்கலைக்கழகம் சார்பான பிரதிநிதி நடத்தவுள்ளார். இக் கருத்தரங்கில் பங்குபற்றுவதன் மூலம் முழுமையான விபரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
குறிப்பு:- காமராஜர் பல்கலைக்கழகத்தினால் இதற்குரிய பதிவு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காமராஜர் பல்கலைக்கழகத்தின்
யாழ். இணைப்பாளர்,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-278)


# வரலாற்றில்...

இணங்கியுள்ளனர். தற்போதைய அரசாங்கத்தைக் கலைத்து தேர்தல் ஒன்று வருமானால் அது எமக்கே சாதகமாகும். இனி நாம் அதிக பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வருவோம் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

நேற்றைய பேச்சுக்கள் குறித்து கருத்துத் தெரிவித்த நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் - புலிகளின் தலைவர் கூறியதைப் போன்று, தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடத்தில், உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற தீர்வைப் பரிசீலிக்க இருதரப்பும் இணங்கியமை ஒரு வரலாற்றுத்திருப்பம் என்றார்.


எழுதுநர் சேவை போட்டிப் பரீட்சை
மாதிரி நுண்ணறிவு வினாத்தாள்
நடைபெறவுள்ள எழுதுநர் சேவைக்கு ஆட்சேர்ப்பிற்கான போட்டிப்பரீட்சையின் மாதிரி "நுண்ணறிவு" - வினாத்தாள நாளை மறுதினம் ஞாயிறன்று நமது ஈழநாட்டில் பிரசுரமாகவுள்ளது.


# எமது நியாயமான தீர்வுக்கு ...

இல்லாமலிருக்கின்றனர்.

ஆகவேபுதிதாகக் கொண்டு வரப்பட வேண்டிய அரசியல் யாப்பு - ஒரு சமஷ்டி யாப்பாக இருக்க வேண்டும். அதில் தமிழ் மக்கள் வாழும் வரலாற்று நிலம் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். குறிப்பாக, வட- கிழக்கு மாகாணங்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் மட்டுமல்லாது முஸ்லிம் மக்களது அபிலாஷைகள், அவர்களது அச்சங்கள், அவர்களுடைய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பேசி, அவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஒரு சமஷ்டி அமைப்பு கொண்டு வரப்பட வேண்டும்.

புதிய அரசியல் யாப்பை நடைமுறைப்படுத்துவதென்பது பெரிய விடயம். இதில் இரண்டு கட்சிகளும் முரண்பட்டுள்ளன. ஆகவே புதிய யாப்பைக் கொண்டுவருவதெனபது சிக்கலான விடயமே.

ஆனாலும், அதற்காக நாம் அரசியல் தீர்வுத்திட்டம் சம்பந்தமான விடயங்களை ஆராய்வதற்கோ, அதனைப்பற்றி முழுமையாக முடிவெடுப்பதற்கோ பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

ஆகவே- தமிழ்மக்களைப் பொறுத்தவரையில், விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் சமாதானத்தைப் பிரேரிக்கின்ற அதேவேளை, சர்வதேச உலகம் அங்கீகரிக்கக் கூடிய ஒரு அரசியல் திட்டத்தை வடிவமைப்பதில் நாம் முழுமையாக ஈடுபட்டிருக்கிறோம்.

அதற்கு அரசியல் யாப்பு வடிவம் கொடுப்பது சிங்கள மக்களின் பொறுப்பு. ஒரு தேர்தல் நடதத வேண்டுமா, அல்லது அதனை எப்படிக் கொண்டு வருவதென்பது சிங்கள மக்களைப் பொறுத்தது.

ஆனால் - சர்வதேச உலகம் நிச்சயமாக எமது கோரிக்கையை ஏற்கும். எமக்கும் எமது மக்களுக்கும் நியாயமான தீர்வொன்றினைக் கொண்டு வரவேண்டுமென்பதை உணர்ந்து சர்வதேச உலகம் எங்களுக்கு ஆதரவாக இருக்கின்றது.

கனடா நாட்டின் அரசியல் யாப்புப்பற்றி நாங்கள் அங்குள்ள அரசியல் நிபுணர்களோடு கலந்தாலோசித்துள்ளோம்.

அங்கு 'கியூபெக்' என்றதொரு பிரதேசம் உள்ளது. அங்குள்ள மக்களுக்கு- தலைவர் சொன்னது போல- உள்ளக சுயநிர்ணய உரிமை, வெளியீடான சுயநிர்ணய உரிமை என்பன உண்டு. அவர்கள், உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமக்கு விருப்பமான, கூடிய அதிகாரங்களுடன், ஒரு சுயாட்சியை அமைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் - அவர்களுக்குள்ள வெளியீடான சுயநிர்ணய உரிமையின்படி, பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது.

அந்த உரிமையைப் பிரயோகித்து சர்வஜன வாக்கெடுப்பும் அங்கு நடைபெற்றது. ஆனால் அம் மக்கள் கனடாவை விட்டுப்பிரிந்து செல்ல விரும்பவில்லை. பொருளாதார ரீதியாக கனடாவுடன் இருப்பதை அவர்கள் விரும்பினர்

எங்களைப் பொறுத்தவரையில் இவ்வாறான முற்போக்கான வடிவங்களை, அதிலுள்ள அம்சங்களை- எங்களுக்குப் பொருந்துமா எனப் பார்ப்பதில் தவறொன்றுமில்லை.

ஆனால், கனேடிய யாப்பு வடிவத்தை மட்டும் நாம் பரிசீலிக்கப் போவதில்லை. ஜேர்மனி, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் யாப்பு வடிவங்களையும் ஆராய இருக்கிறோம்.

நாம் ஓரிருதினங்களில் சுவிஸ் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அந்த நாட்டுக்குச் சென்று அங்குள்ள யாப்பை ஆராயவுள்ளோம். இப்படியாக பல்வேறு நாடுகளுக்கும் சென்று அங்குள்ள யாப்புக்களை ஆராய்வதே எமது நோக்கம்.

இது ஒருபுறமிருக்க - இவ்வாறான அரசியல் வேலைகளுக்காக நாம் ஒரு அரசியல் விவகார உபகுழு ஒன்றை உருவாக்கியுள்ளோம்.

இதில்- இயக்கத்திலுள்ள மூத்த உறுப்பினர்கள், அரசியல் அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அவர்களை வெவ்வேறு நாடுகளுக்கும் அனுப்பி, யாப்பு விடயங்களில் அனுபவங்களைப் பெறச்செய்து அவற்றிலுள்ள விடயங்களை படித்துவரச் செய்வோம்.

**மலையக மக்களின் அரசியல் உரிமைகள்**

எங்களுக்கும் மலையகத் தலைவர்களுக்குமிடையே நடாத்தப்பட்ட பேச்சுக்களில் மலையக மக்களின் அரசியல் உரிமைகள் பற்றிப் பேசியுள்ளோம்.

இந்த விவகாரத்தை மலையக மக்களுடன் கதைத்து, அவர்கள் செயலாற்றப் பொறுப்புக் கொடுத்துள்ளோம்.

தொண்டமான் மற்றும் சந்திர சேகரனுடன் கதைத்த விடயங்களிலிருந்து- தமது மக்களின் விவகாரங்களைத் தாங்களே கையாள வேண்டுமென்றும், தங்களுடைய அரசியல் விவகாரங்களில் விடுதலைப்புலிகள் தலையிடுவதையும் அவர்கள் பெரிதாக விரும்பவில்லை.

ஆனால் நாங்கள் மலையக மக்களுக்காகக் குரல் கொடுக்க என்றும் தயாராக உள்ளோம்.

நியாயமான எண்ணிக்கையான மலையக மக்கள் வன்னியில் குடியேறியுள்ளார்கள். அவர்களை எமது சமூகத்துடன் உள்வாங்கி விட்டோம். நாம் பிரித்துப் பார்க்கவில்லை.

ஆகவே, மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். தொண்டமான், சந்திர சேகரன் ஆகியோர் அமைச்சர்களாக இருப்பதால் அவர்களுக்கு கூடிய அதிகாரங்களுள்ளன. அரசிடம் நேரடித் தொடர்பு இருந்தது. ஆகவே, இப்பிரச்சினையை அவர்கள் திறமையாகக் கையாள வேணடும் என்பதுதான் எமது நோக்கம்.

**வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்தும் வழிமுறை**

வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நிதியை சர்வதேச வங்கியொன்றில் இடுவதற்கு முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. குறிப்பாக உலக வங்கி அந்தப் பணத்தைச் சேர்க்கும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்திக்கான உபகுழு- வேலைத் திட்டங்களைத் தயாரித்து, அந்த வேலைத்திட்டங்களுக்கான மதிப்பீட்டின் அடிப்படையில் உதவிப் பணத்தைப் பெற்றுப்பயன்படுத்தும்.

அதேவேளை- இத்திட்டங்களை, யார் அமுல்படுத்துவதென்பதையும் இந்த உபகுழு தீர்மானிக்கும். நாங்கள் அங்கம் வகிக்கும் அதே உபகுழு, வேலைத்திட்டங்கள் எவ்வாறு நடைபெறுகின்றதென்பதை அவதானிக்கும் பொறுப்பையும், கடமையையும் வைத்திருக்கும்.

இந்த உபகுழுவுக்கான தலைமைச்செயலகம் கிளிநொச்சியில் உருவாக்கப்பட்டு வருகின்றது. அந்த தலைமைச் செயலகம் வெகு விரைவில், இன்னும் ஒரு சில வாரங்களுக்குள் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கும்.

**முஸ்லிம்களின் விவகாரம்**

முஸ்லிம் மக்களுடைய விடயம் பற்றி தலைவர் பிரபாகரன் ஏற்கனவே அமைச்சர் ஹக்கீமுடன் புரிந்துணர்வு உடன்பாடொன்றைச் செய்திருந்தார்.

அந்த உடன்பாட்டின் முக்கிய விடயம், தமிழ்-முஸ்லிம் மக்களிடையே நல்லுறவை வளர்ப்பது. முஸ்லிம் மக்களிடையே எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது, அவர்களின் பாதுகாப்பைப் பேண வேண்டும் என்ற கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென இரண்டு தரப்பிலும் முடிவாகியிருந்தது.

வரலாற்று முக்கியத்துவம் மிக்க கட்டத்திலுள்ள இப்பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்கள் இடம்பெறவில்லையென்பது மிகவும் வருத்தமான விடயம். அமைச்சர் ஹக்கீம், முஸ்லிம் காங்கிரசின் உட்கட்சிப் பிரச்சினைகளால் திரும்பிப் போகவேண்டியிருந்தது.

ஆனாலும், எங்களைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தைகளின் போது, முஸ்லிம் மக்களின் நலன்களைப் பற்றி நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது, முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய ஒருதலைமை, ஒரு பிரதிநிதி வருவார். ஆனாலும், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் பற்றி ஆராயும் போது, ஒட்டுமொத்தமாக முஸ்லிம் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாக- நாம் உத்தேசித்திருக்கும் ஒரு சமஷ்டிக் கட்டமைப்பில் அவர்களின் பங்கு எவ்வாறிருக்கும் என்பதை நிச்சயம் கருத்திலெடுப்போம்.

முஸ்லிம் மக்களுக்கு உருப்படியான தலைமைக்கென ஒரு பிரச்சினை வந்தாலும் - விடுதலைப்புலிகள் இயக்கம் அந்த மக்களின் நலன்களை, பாதுகாப்பை நிச்சயமாக வலியுறுத்தும்.

**இந்தியாவின் நிலை**

தற்போதைய பேச்சுக்களிலிருந்து இந்தியா ஒதுங்கியதாகக் கருதவில்லை. அவர்கள் நேரடியாக பங்குபற்றாது நோர்வே மூலம் பேச்சுவார்த்தை பற்றி அறிந்து வருகின்றனர். சர்வதேச நிதி ஆதரவு மாநாட்டில் அவர்கள் கலந்து கொள்ளாமைக்குக் காரணம் இந்தியா ஒரு உதவி வழங்கும் நாடல்ல. அது உதவி பெறும் நாடுகளில் ஒன்று. நல்லதோர் தீர்வு வேண்டுமெனில் அதற்கு இந்தியாவின் பங்களிப்புத் தேவை. காலக்கிரமத்தில் இந்தியா பங்கு கொள்ளும் என நாம் எதிர்பார்க்கின்றோம். "ஒட்டாவா" கண்ணிவெடி எதிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அரசதரப்பில் இணக்கம் ஏற்பட்டுள்ளது. எமது தரப்பில் இது குறித்து எமது தலைமை ஆராய்ந்து வருகிறது என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.


எழுதுவினைஞர் போட்டிப்பரீட்சை பயிற்சி வகுப்புக்கள்
ஆரம்பம்:
07-12-2002, 9.00 மணி
மொழித்திறன், பொது உளச்சார்பு வினாத்தாள்கள் இங்கே கிடைக்கும்
நியூட்டன். யாழ். நகர்.


## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.36 | 96.81 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.69 | 152.01 |
| 1 யூரோ | 95.98 | 95.09 |
| 1 சுவிஸ் பிராங் | 65.03 | 66.04 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 53.70 | 54.68 |
| 1 ஜப்பானிய யென் | 00.76 | 00.77 |
| 1 சவூதி றியால் | 25.79 | 25.79 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.